


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524









29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராந்த செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit














உதயம் 1581 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 24, 2026


## "எங்களின் உயிரை உங்களின் கைகளில் ஒப்படைக்கின்றோம்"



### யாழ் – செம்மணியில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் காணாமல்போனோரின் உறவுகள் கண்ணீருடன் மகஜர்

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதனை ஏற்றுக்கொண்டு, உரிய சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் கடந்த 22ம் திகதி புதன்கிழமை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டனர். இவர்களின் வருகையின்போது தூதுக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (தொடர்ச்சி 6ம் பக்கம்)

## "ஊழல் வழக்குகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவே, ராஜபக்சாக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள்" – பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன



"எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் தற்போது பிணையில் வெளியே இருக்கின்றார்கள். அவர்கள் வெகுவிரைவில் சிறைக்குச் செல்வார்கள். இவ்வாறான நிலையில், இன்னும் எத்தனை பேர் தற்கொலை செய்துகொள்ளப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை."

- இவ்வாறு அநுரகுமாரவின் அரசின் விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார். (தொடர்ச்சி 4ம் பக்கம்)

## "ZEE தமிழ்" தொலைக்காட்சியின் "தமிழா! தமிழா! நிகழ்ச்சி புகழ் ஆவுடையப்பன் கனடா வருகின்றார்!



கனடாவில் வெளிவரும் மாதப் பத்திரிகையான "தேசம்" ஆண்டு விழா-வில் கலந்து கொண்டு சபையோரை உற்சாகப்படுத்தவும் மகிழ்விக்கவும் ZEE தமிழ்" தொலைக்காட்சியின் "தமிழா! தமிழா! நிகழ்ச்சி புகழ் ஆவுடையப்பன் கனடா வருகின்றார் என்ற தகவலை மேற்படி பத்திரிகையின் ஆசிரிய பீடத்தினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 2026 நடுப்பகுதியில் ஸ்காபுறோவிலும் ரொறன்ரோவிலும் நடைபெறவுள்ள விழாக்களில் "தமிழா! தமிழா! நிகழ்ச்சி புகழ் ஆவுடையப்பன் கனடா வாழ் தமிழ் அன்பர்கள் மற்றும் ரசிகர்களை தேர்வு செய்து தனது நெறியாழ்கையில் மேடை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 647 891 7725 என்னும் இலக்கத்தை அழைக்கலாம் என வேண்டப்படுகின்றனர்













இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொருவரும் மாணவரே,
இயற்கையே அவர்களின் குரு!

– யோகி ஸ்ரீநிவாஸ் ஆர்க்கா

யோகி ஸ்ரீநிவாஸ் ஆர்க்கா அவர்கள் நேரடியாக் கலந்து சிறப்பிக்கும்

## குரு பூர்ணிமா உற்சவம்

யூலை 29ம் திகதி புதன்கிழமை
மாலை 5.30 மணிக்கு

**J & J Buroak Banquet Hall**
50 Anderson Avenue
Markham, Ontario L6E 1A5
Canada



மேற்படி ஆன்மீக நிகழ்வில் கலந்து கொள்ள முன்பதிவு செய்வதற்கு (416) 602-7776 என்னும் இலக்கத்தில் Sheena என்பவரை அழைக்கவும்.
கீழே காணப்படும் இணைப்பில் மேற்படி உற்சவத்தின் நேரடி ஒளிபரப்பை நீங்கள் பார்த்து பரவசமடையலாம்!
(Link: vimeo.com/event/6062648

உற்சவத்தின் இறுதியில் மஹாபிரசாதமும் வழங்கப்பெறும்!

**World renowned author, teacher, philosopher, and founder of Arka Mahaganapathy, Arka Foundation, Mysore and Centre for Conscious Awareness charities worldwide. Having developed his own intuitive method, Arka Dhyana Intuitive Meditation, Yogi Arka has been travelling around the world.**

SrinivasArkaOfficial SrinivasArkaOfficial SrinivasArka
www.srinivasarka.org
SRINIVAS ARKA

# அழைப்பிதழ்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும்
நூல்களின் சங்கமம் ( நூல் கண்காட்சி 2026 )

## Confluence of Books
(Book Exhibition 2026)

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் 16, 2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை | தமிழிசைக் கலாமன்ற மண்டபம் 1120, Tapscott Road, Unit 3 Scarborough, ON, M1X 154 |

இரண்டாவது தடவையாக நூல்களின் கண்காட்சி இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்ச்சியில் பல எழுத்தாளர்கள் தமது நூல்களைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் முன் வந்துள்ளார்கள். சில புதிய நூல்களின் வெளியீடுகளும் நடைபெறவுள்ளன. நூல்களின் கண்காட்சியும் விற்பனையுடன் இளையோர் நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் குடும்பத்துடன் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அதிகமானளவு இளையோர்களையும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பயனடைய வேண்டுகின்றோம்.

அன்புடன்
ரவி கனகசபை, தலைவர், kana-ravi@hotmail.com,
முனைவர் வாசுகி நகுலராஜா, செயலாளர், vasuki.nagularajah@gmail.com
இராச்குமார் குணரட்ணம், பொருளாளர்
மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

நீங்கள் விரும்பும் **HONDA** வாகனங்களை ரமணன் திரு என்னும்
விற்பனை முகவரோடு தமிழில் உரையாடி வாங்கலாம்






HONDA | Certified PRE-OWNED

Honda Certified Used Vehicles are highly sought after thanks to Honda's legendary reputation for durability, quality and reliability.

Rafih AUTO GROUP
Midtown Honda | HONDA
3400 Dufferin St, North York, ON M6A 2V1



**RAMANAN THIRU**
SALES CONSULTANT
647 818 6645

RESERVE YOURS TODAY
**MADE WITH DOMESTIC & IMPORTED PARTS.
† See dealer for full details.
° O.A.C. Terms and conditions apply.

## உதயன் கதிரோட்டம்

# யூலைப் படுகொலைகளின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டை, உடல் நடுக்கத்தோடும் உணர்வுகளைப் பகிர்ந்தும் நாம் கடந்து செல்கின்றோம்!

தற்கால உலக அரசியலில் இனம் மற்றும் மொழிகளின் அடிப்படையில் மக்களை கூறுபோடுவதில் அரசியல்வாதிகள் தங்கள் காய்களை நகர்த்திய வண்ணம் தங்கள் பதவிகளை எப்போதும் தக்கவைத்துக் கொள்ளவே முயல்வார்கள். குறிப்பாக முதலாளித்துவப் போக்குள்ள அரசியல்வாதிகள் அந்த தேசத்தின் மக்களில் விவசாயிகளாகவும் தொழிலாளர்களாகவும் உள்ள மக்களை இனம் மற்றும் மதம் சார்ந்து பிரித்து வைப்பதே தங்கள் முதற்பணி என்பதை கவனித்துச் செய்வார்கள்.
அவ்வாறு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களை மதம் மற்றும் மொழி சார்ந்து பிரிந்து நிற்கச் செய்தால் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டம் என போராடும் சக்தியை அந்த உழைக்கும் வர்க்கம் குறைத்துக் கொள்ளும் என்ற உண்மையை முதலாளித்துவம் சார்ந்து தங்கள் அரசியலை நகர்த்திச் செல்லும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு அரசியல் காய் நகர்த்தல்களே இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமாக விளங்கியது. இதனால் தான் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் உழைக்கும் மக்கள் என்ற ஒரே வர்க்கமாக தங்கள் உரிமைகளுக்காக போராடியவர்கள் பின்னாளில் மொழிசார்ந்தும் மதம் சார்ந்தும் பிரித்தாளப்பட்டார்கள். இதன்" விளைவாக இலங்கையில் இனவாதம் இருப்பக்கங்களிலும் பிரயோகிக்கப்பட நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறான திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்திரத்தில் முக்கியமானவர்களாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்க மற்றும் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அடங்கிய பல சிங்கள தேசிய அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகளும் கைகோர்த்து நின்றார்கள் என்பதை சாதாரண தமிழ் மற்றும் சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்களும் இனவாதச் சேற்றில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக இயற்கை வளங்களையும் சாதகமான கால நிலையையும் கொண்ட இலங்கைத்தீவில் அமைதி இன்மை ஏற்பட இனவாதம் காரணமாக விளங்கியது. பெரும்பான்மை இன சிங்கள மக்களை திருப்திப் படுத்தும் வகையில் சிங்களத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி பதவிக்கு வந்து மாணவர்களின் பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். குறிப்பாக "தமிழ் மாணவர் பேரவை" போன்ற மாணவர்களின அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துவதற்காக மாணவர்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டினார்கள். அப்போது அந்தப் போராட்டங்களை அடக்கும் வகையில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றைச் செய்ய இலங்கைப் பொலிசாருக்கு அரசாங்கங்கள் அழுத்தங்கள் கொடுக்கத் தொடங்கின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளா டேவிற்சன் மற்றும் பொன் சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
இவ்வாறான மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டங்களே பின்னாளில் ஆயுதங்கள் ஏந்திய போராட்டங்களாகவும் தாக்குதல்ககளாகவும் மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களை தமிழ் மக்களும் வரவேற்று தங்கள் ஆதரவை வழங்கினார்கள். தமிழ் மக்களுக்காக விடுதலையைப் பெற்றுக்கொள்ள் "ஆயுதப் போராட்டம்" ஒன்றே உகந்தது என்பதை மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் ஏற்றுக்கொணடார்கள்.

இந்த போராட்ட வடிவத்தின் வளர்ச்சியானது 1983ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்தப்பெற்ற தாக்குதலில் 23 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட இந்த சம்பவம் சிங்கள அரசியல்வாதிகள் பலரையும் சில தமிழ் அரசியல்வாதிகளையும் அதிரச் செய்தது. சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதற்கு இனவாத சாயம் பூசப்பட்டு பின்னர் அது இனக்கலவரமாக வெடித்தது. அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு வார காலத்திற்கு இலங்கை எங்கும் நடத்தப்பெற்ற இனவாதக் கொலைகளே இன்றும் நாம் 43 வது ஆண்டாக நினைவு கூர்கின்ற ஒரு துயரங்கள் நிறைந்த நினைவுகளாக எம்மோடு பயணிக்கின்றது. பின்னரும் தொடர்ச்சியாக நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இரையாகிப் போன எம் உறவுகளை நாம் உருக்கத்துடன் நினைவு கூறும் இந்த யூலைப்டுகொலை அனுஸ்டிப்பை நாம் அனைவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கடந்து செல்வோம்.!

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608

4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2

website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com




**One Bedroom Basement வாடகைக்கு உண்டு**

One Bedroom Basement உடனடியாக வாடகைக்கு உண்டு HWY 27 and Langstaff Road. சந்திப்பிற்கு அருகில். Woodbridge, Brampton ஆகிய இடங்களுக்கு அருகில் மேலதிக விபரங்களுக்கு: 416 428 2141

**உணவகத்தில் வேலை வாய்ப்பு**

ரொறன்ரோவில் உள்ள உணவகம் ஒன்றில் Dish Washer ஆக வேலை செய்ய உடனடியாக ஆண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். அத்துடன் வேலையில் உயரவும் வாய்ப்பு உண்டு. தொடர்புகளுக்கு: kumargurunala@gmail.com - அல்லது 647.617.0662 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஐரோப்பிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் செம்மணி புதைகுழிக்கு 22ம் திகதி புதன்கிழமையன்று சென்றார்



- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழியை பார்வையிட நான்கு ஐரோப்பிய நாடுகளினதும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் தூதுவர்கள் குழு வருகை தந்துள்ளது.

இம் மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தூதுவர்களே செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு 21 ஆம் திகதி வருகை தந்த குழுவினர் 22 ஆம் திகதி செம்மணி புதைகுழியைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் செம்மணியை பார்வையிடும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் குழு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் செயல்பாட்டாளர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

# மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தற்போதைய அரசை வீழ்த்துவோம் என்ற இலக்கோடு தேர்தல்களில் ஒன்றிணைந்துகொள்வார்கள்

## சஜித் பிரேமதாச அணி நம்பிக்கை தெரிவிப்பு



மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தற்போதைய மக்கள் விரோத அரசை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்குக்காகக் கொண்டு, எதிர்காலத் தேர்தல்களில் அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படும் என்பதில் நாட்டம் கொண்டவர்களாக உள்ளார்கள். அவர்களது இணைவில் எமக்கு முழு நம்பிக்கை உள்ளது தங்களின் உரிமைகளுக்காகவும் கோரிக்கைகளுக்காகவும் தனியாக ஒழுங்கமைவதில் தவறில்லை. அவர்கள் அனைவரும் தொடர்ந்தும் எமது ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்துதான் பயணிக்கின்றனர். இந்த வகையில் தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய சிறுபான்மைக் கட்சிகள், தமது உரிமைகளுக்காகத் தனியானதொரு புதிய கூட்டணியை உருவாக்குவதில் எமக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தங்களின் உரிமைகளுக்காகவும் கோரிக்கைகளுக்காகவும் தனியாக ஒழுங்கமைவதில் தவறில்லை. அவர்கள் அனைவரும் தொடர்ந்தும் எமது ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்துதான் பயணிக்கின்றனர். அவர்களுக்கு. தற்போதைய மக்கள் விரோத அரசை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்குக்காக, எதிர்காலத் தேர்தல்களில் அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படும் என்பதில் எமக்கு முழு நம்பிக்கை உள்ளது." - என்றார்.

இதன்போது நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் அரசின் நிர்வாகக் குறைபாடுகள் குறித்தும் அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் ஆதிக்கம் தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர், அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் அரசின் நிர்வாகச் சீர்குலைவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

"சிறைக்குள் வன்முறை வெடித்தபோது, உரிய நேரத்தில் பொலிஸாரின் உதவியைப் பெறவோ அல்லது முறையான முடிவுகளை எடுக்கவோ சிறைச்சாலை நிர்வாகத்துக்கு அதிகாரம் வழங்கப் படவில்லை. இக்கட்டான சூழலில் நீதி அமைச்சரைத் தொடர்புகொள்ள அதிகாரிகள் பல மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. இதுவே இந்த அரசின் நிர்வாகக் கட்டமைப்பு சிதைந்துள்ளதற்கான சான்று." - என்று அவர் சாடினார்.

அரசின் தற்போதைய நிலைப்பாடு குறித்துப் பேசிய திஸ்ஸ அத்தநாயக்க, ஒன்பது ஆண்டுகளாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

"முகநூலில் பகிரப்படும் கருத்துக்களைத் தாண்டி, அரசுக்கு உண்மையிலேயே மக்கள் ஆதரவு உள்ளதா என்பதை நிரூபிக்கும் களமாக மாகாண சபைத் தேர்தல் அமையும். ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகள் மூலம் பிராந்தியங்களை நிர்வகிப்பது அரசமைப்பை மீறும் செயலாகும். ஜனாதிபதிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்குமாயின், தேர்தலை நடத்தி அதனை நிரூபித்துக் காட்டட்டும்." - என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

# நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி அநுர தலைமையில் உயர்மட்டச் சந்திப்பு!



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு 17ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போது சிறைச்சாலைக் கட்டமைப்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், சிறைச்சாலை அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் நலன்புரி விடயங்கள் குறித்தும் இதன்போது ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

ஜனாதிபதி ஒருவருடன் நேரடியாகத் தமது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு கிடைத்த முதலாவது சந்தர்ப்பம் இதுவெனச் சுட்டிக்காட்டிய சிறைச்சாலை அதிகாரிகள், அதற்காக ஜனாதிபதிக்குத் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் அயேஷா ஜினசேன, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார, சிறைச்சாலைகள் ஆணையாளர் (புனர்வாழ்வு) எஸ்.கே. பல்லெதென்ன, சிறைச்சாலைகள் ஆணையாளர் (செயற்பாடுகள் மற்றும் புலனாய்வு) ஏ.சி. கஜநாயக்க உள்ளிட்ட சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# "ஊழல் வழக்குகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே, ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள்."

## எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் விரைவில் சிறை செல்வார்கள் என்றும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன அதிரடி



"எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் தற்போது பிணையில் வெளியே இருக்கின்றார்கள். அவர்கள் வெகுவிரைவில் சிறைக்குச் செல்வார்கள். இவ்வாறான நிலையில், இன்னும் எத்தனை பேர் தற்கொலை செய்துகொள்ளப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை."

இவ்வாறு விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "சர்ச்சைக்குரிய வழக்குகள் மற்றும் ஊழல், மோசடிகளுடன் தொடர்புடைய சாட்சிகள் மர்மமான முறையில் உயிரிழந்து வருகின்றமை கவலைக்குரியது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கபில சந்திரசேன, எயார் பஸ் கொள்வனவு மோசடி தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சத்தியக்கடதாசி ஒன்றின் ஊடாகப் பல தகவல்களை வெளியிட்டிருந்தார். அவர், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தங்காலை கால்டன் இல்லத்தில் வைத்து இலஞ்சம் வழங்கியதாகத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். தற்போது முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவும் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இது குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலப் படுகொலைகள் மற்றும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெறுவதால், அதனுடன் தொடர்புடைய பலர் பெரும் அச்சமடைந்துள்ளனர். ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான அனைத்து வழக்குகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான வழக்குகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே, ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள்." - என்றார்.



# "எம்மீதான அடக்குமுறையே சமஷ்டியைக் கோரவைத்தது, தனி ஈழம் ஒன்றே தீர்வாகத் தெரிந்தது;"

இலங்கை செய்திகள் Sri Lanka News

## ஆட்சியாளர்களின் மனமாற்றமே இத்தீவில் நல்லிணக்கத்தைக் கொண்டு வரும் என்கிறார் ரவிகரன் எம்.பி.

**- ந.லோகதயாளன்**

இந்தநாட்டில் அகிம்சைவழியில் உரிமைக்குரல் உயரும்போதெல்லாம் அரச இயந்திரங்களின் துணையோடு தமிழர்கள்மீதான அடக்குமுறைகள் இனக்கலவரங்களாகத் தொடர்ந்ததாகத் தெரிவித்த வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறாக அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டதாலேயே தமிழர்கள் சமஷ்டியையும், தனி ஈழத்தையும் கோரவேண்டியநிலை ஏற்பட்டதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே ஆட்சியாளர்கள், இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகமான ஈழத் தமிழர்களுக்கு அரணாகுவதால் மாத்திரமே இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுமெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்துகாணால் ஆக்கப்பட்டோர் விவகாரம், முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை, புதைகுழிகள் விவகாரம், நினைவேந்தல் உரிமை உள்ளிட்ட தமிழர்கள் நீதிகோரும் விடயங்களுக்கு ஆதரவாக ஆட்சியாளர்களும் குரல் கொடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

கறுப்பு ஜூலை தொடர்பாக பாராளுமன்றில் 23.07.2026 அன்று பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளையின்போதான பிரேரணையில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இன்றைய நாள் தேசிய மக்கள் சக்தி சார்பாக சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரை- ணயை கொண்டுவந்துள்ள கௌரவ உறுப்பினர் தனுர திசாநாயக்க அவர்களின் நல்ல நோக்கங்கள் நிறைவேறட்டும்.

ஈழத்தமிழர்களும் ஈழத்தமிழர்களின் சார்பாளர்களாக இந்தப் பேரவையிலே கடந்த காலங்களில் இருந்தவர்களும் இப்போது இருக்கின்றவர்களாக நாமும் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களல்லர். ஈழத்தமிழர்களாகிய நாங்களும் எமது தாயகத்தில், தன்னாட்சி அதிகாரங்களோடு ஒரு தேசிய இனமாக வாழவேண்டும் என்பதே எங்களின் அன்று தொட்டு இன்றுவரையான அடிப்படைக் கோரிக்கையும் அரசியலும். ஈழத்தமிழர்கள் ஒட்டுமொத்த தீவையும் அளவற்று நேசித்தவர்கள். நேசிப்பவர்கள். தீவு முழுமைக்கும் படர்ந்திருந்திருந்த எங்கள் வாழ்வும் வளமும் காலவெளியிலே அடக்குமுறைகளால் சுருக்கப்பட்டது. எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கு அரணாகுதல் என்பதே பல்லினவாழ் சமூகத்தின் நிலைே-பறான எழுச்சிக்கான அடிப்படை. ஆனாலும் இத்தீவின் அதிகாரம் பிரித்தானியரிடம் இருந்து கைமாற்றப்பட்ட பின்னர் மாறிவரும் ஒவ்வோர் அரசாங்கமும் அவ் அடிப்படை கருத்தியலை கையிலெடுக்கவில்லை. மாறாக ஈழத்தமிழர்களின் உரிமைகளை நேரடியாகவும் கட்டமைக்கப்பட்ட வழிகளிலும் கட்டுப்படுத்தியது. கட்டுப்படுத்துகிறது.

கறுப்பு யூலை என்பது ஈழத்தமிழர் அழிப்பில் தொடக்கப்புள்ளியும் அல்ல. முற்றுப்புள்ளியும் அல்ல. மாறாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு வெளியிலே கறுப்பு யூலை ஒரு காற்புள்ளி.

கல்லோயா குடியேற்றத்திட்டங்களுக்காக 1956 இல் கொல்லப்பட்டோம். எங்கள் வாழிடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டோம்.

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்தோம். அதனால் 1958இல் மீண்டும் கொல்லப்பட்டோம். அகிம்சை வழியில் எங்களின் உரிமைக்குரல் உயரும் போதெல்லாம் அரச இயந்திரத்தின் துணையோடு எம்மீதான அடக்குமுறைகள் இனக்கலவரங்களாக தொடர்ந்தன.

1977ஆம் ஆண்டின் பின்னர் 1981 இல் யாழ்ப்பாணத்தில் நேரடியாக எங்கள் யாழ் நூலகமும் கடைகளும் சொத்துகளும் அரச ஆதரவோடு எரித்து நாசமாக்கப்பட்டன. அதன் பின்னரே இன்றைய ஒத்திவைப்பு வேை-ளயில் உரையாடப்படும் கறுப்பு யூலைக்கலவரம் அரங்கேறியது. உயிரோடு எரிக்கப்பட்டோம். சொல்லொணா உயிர், உடமை இழப்புகளுக்கு ஈழத்தமிழர்கள் நாம் உள்ளாக்கப்பட்டோம். பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் (ICJ) இதனை இனப்படுகொலை என விபரித்தது.

இதன் தொடர்ச்சியாக சிறைகளுக்குள்ளும் அரச ஆதரவோடு தமிழர்கள் மீதான இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. 1983 வெலிக்கடை, 1997 களுத்துறை, 2000 பிந்துனுவேவா என இப்பட்டியல் நீண்டது. பல்லினவாழ் சமூகம் இத்தீவில் மட்டும் வாழவில்லை. மாறாக பல்லினவாழ் சமூகம் வாழும் அனைத்து இடங்களிலும் இவ்வாறான அடக்குமுறைகளும் இனக்கலவரங்களும் தொடர்ச்சியாக ஏவப்படுவதுமில்லை.

இன்று, எங்களுக்காக இறந்த எங்களின் உறவை நினைவேந்த இயலுமாக இருப்பது தான் சுதந்திரம் என்று இருக்கும் நிலைக்கு இத்தீவில் சுதந்திரம் சுருக்கப்பட்டுவிட்டது. உரத்துக்கேட்டு உயிர் மாய்த்து இன்று செம்மணியில் என்புகளாகியும் இந்தத்தீவிலே எங்கள் நீதியை வேண்டிக்கொண்டு இருக்கிறோம்.

உறுப்பினர், தனுர திசாநாயக்க அவர்களின் கோருகின்ற நல்லிணக்கம் எப்போதும் நிரந்தரமாக எங்களிடம் இருந்தது தான். அடக்குமுறையே சமஸ்டியை கோரியது. அடக்கு முறையே தனி ஈழத்தை தீர்வாக்கியது. அடக்குமுறையே இன்றளவும் இந்தத்தீவிலே இயல்பான எங்களை வேறுபட்டவர்களாக காட்டுகிறது. எங்களின் நீதிக்காக நீங்களும் குரல் கொடுங்கள்.

எங்களுக்காக பல்வேறு வழிகளிலும் போராடியவர்கள் அரசியல் கைதிகளாக சிறையிலே வாடும் போது நல்லிணக்கம் எப்போது மலர்ந்துவிடும். கடைசி அரசியல் கைதியும் சிறையிலே மரணிக்கும் வரை கூட இந்த அரசின் நெஞ்சும் கல்லாகித்தான் கிடக்குமா!

அரசிடம் நம்பி ஒப்படைத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளின் நீதிக்காக குரல் கொடுங்கள். 1956இலேயே எம்மீதான இனக்கலவரத்துக்கு நீதி கிடைத்திருந்தால் 2009 வரை இனப்படுகொலைகள் தொடர்ந்திருக்காது. அரசே ஆதரவாகி நின்று மேற்கொண்ட குற்றங்களுக்கு அரசே எவ்வாறு தீர்வு கொடுக்கும்? கொடுக்க இயலும்? பன்னாட்டு விசாரணைகளுக்காக குரல் கொடுங்கள். ஈழத்தமிழர்கள் ஒருபொழுதும் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களாக இருந்ததில்லை. மாறாக பல்வேறு வழிகளிலும் தம்மை தற்காத்தபடி உயிரிழந்து உடமை இழந்து நிலமிழந்து அடையாளங்களை இழந்து தொடர்ந்தும் தமக்கான நீதிக்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே! எமக்கு அரணாகுதலே - இந்தத்தீவில் நல்லிணக்கம் - என்றார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# "கறுப்பு ஜீலை இனப்படுகொலையில் பலியான ஈழத் தமிழ் மக்களுக்குப் பொது நினைவுச்சின்னம் அமைக்கப்பட வேண்டும்"

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை



ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றுப் பேரவலத்தில் ஒன்றான கறுப்பு ஜீலை இனக்கலவரம் அரங்கேறி 43 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இத்தனை ஆண்டுகளைக் கடந்தும் இதுவரையில் 1983 ஜீலையில் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளின் நினைவாக ஒரு முறையான நினைவுச்சின்னம் அமைக்கப்படாமல் இருப்பது பெரும் வரலாற்றுத் தவறு ஆகும். இது இறந்த காலத்தை நினைத்து அழுவதற்கானது அல்ல இது ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்காலப் போராட்டத்தின் ஒரு வடிவமும் ஆகும். அந்த வகையில் 2027 ஜீலைக்கு முன்னதாகவாவது 1983 இனக்கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துத் தமிழ் மக்களையும் நினைவுகூரும் வகையில் பொது நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

1983 கறுப்பு ஜீலை இனக்கலவரத்தின் நினைவை முன்னிட்டு பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் தனது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், 1983 ஜீலையில் நிகழ்ந்தது இரு சமூகங்களுக்கிடையே வெடித்த ஒரு சாதாரண கல-வரம் அல்ல. அது, அப்போதைய பேரினவாத அரசாங்கத்தின் முழுமையான ஆசீர்வாதத்தோடும், அனுசரணையோடும் அரச இயந்திரங்களையும், வாக்காளர் பட்டியல்களையும் பயன்படுத்தித் தமிழ் மக்களை இனங்கண்டு மிகத் துல்லியமாக நடாத்தப்பட்ட திட்டமிடப்பட்ட ஓர் இனப்படுகொலை ஆகும். கொழும்பில் ஆரம்பித்துத் தென் இலங்கையின் பிறபகுதிகளுக்கும் மலையகத்துக்கும் பரவிய பேரினவாத வெறியாட்டத்தில் வெலிக்கடைச் சிறையில் கைதிகளாக இருந்த 53 பேர் உட்பட 3000 தமிழர்கள் வரையில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஜீலை இனக்கலவரம் தமிழ் மக்களின் உயிர்களை மாத்திரம் பலியெடுக்கவில்லை. அவர்களின் வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன. ஈழத்தமிழர்கள் பொருளாதார ரீதியாகத் தற்சார்பு அடைந்து விடக்கூடாது என்பதற்காகத் தமிழர்களின் பல தசாப்தகாலப் பொருளாதாரக் கட்டமைப்புகள் ஒரே வாரத்துக்குள் முற்றாகச் சிதைக்கப்பட்டன. தமிழ் மக்கள் வெறும் கையினர்களாக அங்கிருந்து கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். இந்த வரலாற்றுத் துயரங்களை மறப்போம் மன்னிப்போம் என்று கூறிவிட்டு நாம் கடந்து செல்ல முடியாது.

எமது நெஞ்சில் ஆறாத வடுவாக இருக்கும் இந்த வரலாற்றுப் பேரவலத்தின் பின்னணியையும், அதன் மூலம் தமிழ் இனம் கற்றுக்கொண்ட அரசியல் பாடங்களையும் எமது அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துவது முதன்மையான தேசியக் கடமையாகும். இந்த வரலாற்றுக் கடத்துகைக்கு நினைவேந்தல்களும், நினைவுச் சின்னங்களும் அவசியமானவை ஆகும். எனவே, கறுப்பு ஜீலையில் எமது இனம் இழந்த உயிர்களின் சாட்சியாகவும், எமது தேசிய விடுதலைப் பயணத்தின் வழிகாட்டியாகவும் பொருத்தமானதொரு இடத்தில் 1983 கறுப்பு ஜீலை நினைவுச்சின்னம் நிறுவப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# "எங்களின் உயிரை உங்களின் கைகளில் ஒப்படைக்கின்றோம்"

## யாழ்- செம்மணியில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் காணாமல்போனோரின் உறவுகள் கண்ணீருடன் மகஜர்



- ந.லோகதயாளன்

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதனை ஏற்றுக்கொண்டு, உரிய சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் 22ம் திகதி புதன்கிழமை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டனர். இவர்களின் வருகையின்போது தூதுக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளாக வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி உள்ளிட்ட இருவரை அழைத்து ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே யோகராசா கனகரஞ்சினி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினரை செம்மணி மனிதப் புதைகுழி வாசலில் சந்தித்து, எங்களது உயிருக்கு மேலான கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்திருக்கின்றோம். அவர்கள் எங்களால் இயன்ற வரை உங்களுக்காக வேலை செய்வோம் என்று கூறியுள்ளனர்.

எங்களுக்கு எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரிய வேண்டும். இலங்கையில் இனப்படுகொலைதான் நடந்தது என்பதனைச் சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனூடாக சர்வதேச நீதி விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். உள்ளகப் பொறிமுறைகளையோ, விசாரணைகளையோ அல்லது காணாமல்போனோர் அலுவலகம் போன்ற இலங்கை அரசால் அமைக்கப்படும் அலுவலகங்களையோ நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இலங்கை அரசு எங்களுக்கு எப்போதுமே நீதியைத் தரப்போவதில்லை.

எத்தனையோ ஆணைக்குழுக்களையும் அரச பிரதிநிதிகளையும் சந்தித்தோம். எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். சர்வதேசம் எங்களுக்குச் சரியான நீதியைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில்தான் மனுக்களைக் கையளிக்கின்றோம். எங்களோடு போராடியவர்களில் 450 பேருக்கு மேல் இதுவரையில் மரணித்துவிட்டனர். அவர்களுக்கும் எங்களுடைய உறவுகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

கொடூர யுத்தமும் இன அழிப்பும் நடந்து பிற்பாடு கைளிக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைச் சர்வதேசம் மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். கொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும். ஐ.நா. மன்றத்திலும் மனிதநேயத்தை நேசிக்கும் நாடுகளிலும் எமது பிரச்சினைகளை முன்வைத்து, சர்வதேச நீதிக்கான விசாரணையை மேற்கொள்ள உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளோம். இந்த அறிக்கை வெறும் ஆவணம் அல்ல, எமது உயிரையே உங்களது கைகளில் ஒப்படைத்துள்ளோம் என்றே அவர்களிடம் தெரிவித்தோம்." - என்றார்.

# கன்னியாவில் சர்ச்சையை ஏற்படுத்திய தொல்பொருள் திணைக்களத்தின் புதிய கட்டுமானம்!

## நீதிமன்றத் தடையை மீறி அடிக்கல் நாட்டியது தொல்பொருள் திணைக்களம்





- ந.லோகதயாளன்

திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள 136ஆவது தொல்பொருள் நிறைவு ஆண்டை முன்னிட்டு, அவ்விடத்தை சிதைவடையாது பாதுகாக்கும் நோக்கில் புதிய கட்டுமானத்துக்கான அடிக்கல் நாட்டு விழா 22ம் திகதி புதன்கிழமை அன்று காலை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யு. எம்.ஹேமந்தகுமார இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் வில்கம் விஹாரையின் நாயக்க தேரர் அம்பிட்டியே சீலவண்ஸ திஸ்ஸ தேரர் அனுசானம் வழங்கினார்.

திருகோணமலை மாவட்ட தொல்பொருள் திணைக்கள உதவிப்பணிப்பாளர், பிரதேச கிராம சேவகர், இஸ்லாமிய மத குரு மற்றும் துறைசார் அலுவலர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கற்களை நாட்டி வைத்தனர்.

### வரலாற்றுப் பின்னணியும் காணி உரிமையாளரின் வாதமும்

சோழர் ஆட்சிக்காலத்தில் தமிழ் மொழி மூலம், தமிழர்களான பௌத்தர்களுக்குப் பௌத்த கல்வி கற்பிக்கும் சைத்தியம் ஒன்று அங்கு காணப்பட்டது என்று வரலாறுகள் கூறுகின்றன. இதன் பின்னர் அதே இடத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிள்ளையார் கோயில் ஒன்று அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடந்து வந்தன. இந்தக் காணி மடத்தடி முத்துமாரியம்மன் கோயிலுக்குச் சொந்தமானது எனக் குறிப்பிடும் உரிமையாளரான திருமதி கோகிலவதனி கனேஷ் இது குறித்துத் தெரிவிக்கையில்,

"2002 ஆம் ஆண்டு சிதிலமடைந்த கோயிலைப் புனர்நிர்மாணம் செய்ய நாம் முயன்றபோது அது தொல்பொருள் திணைக்களத்தால் தடுக்கப்பட்டது. இது தொடர்பில் நான் தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தேன். இந்நிலையில், 2022 இல் இந்த இடத்தில் எந்தக் கட்டுமானங்களும் அமைக்கக் கூடாது என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்." - என்றார்.எனினும், தற்போது நீதிமன்ற உத்தரவையும் மீறி குறித்த இடத்தில் கட்டுமான வேலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தொல்பொருள் திணைக்களத்தின் விளக்கம்

இந்த இடத்தில் உள்ள புராதன அழிவடைந்த சிதிலங்களை ஒன்றிணைத்து, அந்தப் புராதன கட்டுமானத்தைப் பாதுகாப்பதற்காகவே இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்று அடிக்கல் நாட்டும் நிகழ்வில் உரையாற்றிய திருகோணமலை மாவட்ட தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யு.யு.சுரங்க பெரேரா தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் மேலும் குறிப்பிடுகையில், "கன்னியாவில் இன்று நடைபெறும் நிகழ்வு எந்த மதமும் சார்ந்தது அல்ல. இலங்கையின் புராதன தொல்பொருள் இடமொன்றை பாதுகாக்கும் முயற்சியே இதுவாகும். இதற்குச் சிலர் இன, மத சாயங்களைப்பூச நினைக்கின்றனர். அது அவ்வாறான ஒன்றல்ல.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இலங்கையின் 1,000 தொல்லியல் பகுதிகளைப் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ், இன்னும் சில தினங்களில் சேருநுவர பிரதேச செயலகப் பிரிவின் சோமாவதி பாதுகாப்பு அரண் பகுதியில் அமைந்துள்ள சோழர்காலத்தைச் சேர்ந்த ஸ்ரீ மங்களபுரம் சிவன் ஆலயத்தைப் பாதுகாக்கும் வகையிலான கட்டுமானமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, தொல்லியல் திணைக்களம் மத, இனவாத நோக்குடன் செயற்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்." - என்றார்.

உலக செய்திகள்
World News

# காவல் நிலையங்களில் சம்பவிக்கும் மரணங்களுக்கான காரணங்களை கண்டறிய தனி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டுமென கோரிக்கை



காவல் மரணங்களுக்கான காரணங்களை கண்டறிய தனி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டுமெனடிடிவி தினகரன் கூறினார். தூத்துக்குடி, அமுதா நகர் அருகே சட்டவிரோதமாக மது விற்பனை செய்ததாக காவல்துறையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அருணாசலம் என்ற இளைஞர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில், காவல்துறையினர் அடித்துக் கொலை செய்துவிட்டதாகக் கூறி உடலை வாங்க மறுத்து அவரது உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டே மாதங்களில் மட்டும் நாகர்கோவிலைச் சார்ந்த மாற்றுத்திறனாளி, புழல் சிறையில் அடைக்கப் பட்டிருந்த கைதி, அதன் தொடர்ச்சியாக தற்போது தூத்துக்குடியில் அரங்கேறியிருக்கும் சம்பவம் என அடுத்தடுத்து நிகழும் காவல் மரணங்கள், ஒட்டுமொத்த காவல்துறையின் செயல்பாடுகளையும் கேள்விக்குறியாக்குகின்றன. அதிலும், காவல்நிலையத்தில் வைத்து காவலர்கள் கடுமையாகத் தாக்கியதாக உயிரிழந்த விசாரணைக் கைதி மருத்துவமனையிலிருந்தபடி வாக்குமூலம் அளித்ததாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் வீடியோ காட்சிகளைப் பார்க்கும்போது தமிழகத்தில் இருப்பது காவல்துறையா? அல்லது காட்டுமிராண்டித்துறையா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் முக்கிய அமைப்பாகச் செயல்படும் காவல்துறையின் காவலில் நடைபெறும் இத்தகைய உயிரிழப்புகள் அப்பட்டமான மனித உரிமை மீறல் என்பதைத் தாண்டி, சட்டம் மற்றும் அரசு நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையையும் பாதிப்படையச் செய்கிறது. மாநிலத்தில் நடக்கும் ஒவ்வொரு காவல் படுகொலையும், அந்த மாநிலத்தை நிர்வகிக்கும் அரசு நிர்வாகத்தின் தோல்வியைக் காட்டுவதாகத் தேர்தலுக்கு முன்பாக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட தவெக, தற்போது அடுத்தடுத்து அரங்கேறும் காவல் மரணங்களுக்கு அரசு நிர்வாகத்தின் தோல்வியே காரணம் என்பதை ஒப்புக் கொள்கிறதா?

எனவே, தூத்துக்குடியில் நடைபெற்றிருக்கும் காவல் மரண வழக்கை விரிவாக விசாரித்து, குற்றம் உறுதி செய்யப்பட்டால் தொடர்புடைய அனைவரது மீதும் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, தவெக ஆட்சிக்கு வந்தபின்பு அரங்கேறிய காவல் மரணங்களுக்கான காரணங்களை கண்டறிய தனி விசாரணை ஆணையத்தை அமைக்க வேண்டும் எனவும் தவெக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நீட் வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஓம்.பிர்லாவை சந்தித்து பேசினார்



நீட் வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்து பேசினார். நீட் வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வுகளில் முறைகேடுகள் குறித்து விவாதிக்கக் கோரியும். மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டன. இதன் காரணமாக தொடர்ந்து இரண்டு நாட்களாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடங்கி அவை ஒத்திவைக்கப்பட்டன.


இந்த விவகாரம் தொடர்பாக 3-வது நாளாகவும் நாடாளுமன்றம் முடங்கியது. இந்தநிலையில், நீட் விவகாரம் குறித்து விவாதிக்க தயாராக இருப்பதாக மத்திய அரசு தெரிவித்தது. இந்தநிலையில், நீட் வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்தார். விவாதத்திற்கு ஒப்புக்கொள்வதற்கு முன்பு, மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானின் ராஜினாமாவை ஒரு முன்நிபந்தனையாக எதிர்க்கட்சிகள் முன்வைப்பதாக மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது. இன்று நடைபெற்ற கூட்டத்தொடர் அமளிக்கு மத்தியில் அமித்ஷா ஓம்.பிர்லாவை சந்தித்து பேசி உள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கப்பல்களை தாக்கினால் ஈரானின் மின் நிலையங்களை அமெரிக்கா அழிக்குமென டிரம்ப் எச்சரிக்கை!

கப்பல்களை தாக்கினால் ஈரானின் மின் நிலையங்களை அமெரிக்கா அழிக்குமென டிரம்ப் மிரட்டியுள்ளார். ஈரான்-அமெரிக்கா இடையே போர் தாக்குதல் தொடங்கி 11-வது நாளாக நீடித்து வருகிறது. இருதரப்புக்கு இடையே தொடர்ந்து நடைபெற்று வரும் தாக் குதல்கள் காரணமாக ஹார்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப் பட்டுள்ளது. இதனிடைய அமெரிக்க அதிபர் டிரம்ப், ஈரானின் தாக்குதல் தொடர்ந்தால் தக்க பதிலடி கொடுப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ”இனிவரும் காலங்களில், ஹார்முஸ் நீரிணையில் செல்லும் எந்தவொரு கப்பல் மீதும் ஈரான் ஏவுகணை, ராக்கெட், டிரோன் அல்லது வேறு எந்த ஆயுதத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தினாலும், அமெரிக்கா அதற்கு பதிலடியாக ஈரானின் ஒரு பாலம் அல்லது மின் உற்பத்தி நிலையத்தை குண்டுவீசி முற்றிலும் அழிக்கும். இது ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் உள்ள உள்கட்டமைப்புகளுக்கும் பொருந்தும்” என தெரிவித்துள்ளார்.



# சவுதி அரேபியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள அமெரிக்கா



சவுதி அரேபியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. அணுசக்தி ஒப்பந்தம் மூலம் சவுதி அரேபியாவுக்கு யுரேனியம் செறிவூட்டலுக்கான அனுமதி அளிக்கப்படுகிறது. இதற்காக சவுதி அரேபியாவில் யுரேனியம் செறிவூட்டும் நிறுவனம் அமைக்கப்படும். சர்வதேச அணுசக்தி முகமையானது, தனது உறுப்பு நாடுகளை சிவில் திட்டங்களுக்கு அணுசக்தியை பயன்படுத்த அனுமதிக்கிறது. அதேநேரம் அணு ஆயுதம் தயாரிக்கப்படாததை உறுதி செய்யும் நோக்கில் அந்த நாடுகளில் ஆய்வும் மேற்கொள்கிறது. இந்த முகமையின் உறுப்பு நாடான சவுதி அரேபியா தனது மின்சாரம் தயாரிப்பு உள்ளிட்ட சிவில் தேவைகளுக்கு அணுசக்தியை பயன்படுத்த திட்டமிட்டு உள்ளது. இதற்காக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

குறிப்பாக அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜோ பைடன் காலத்தில் தொடங்கிய இந்த பேச்சுவார்த்தை தற்போதைய அதிபர் டிரம்ப் காலத்திலும் நீடித்தது. கடந்த ஆண்டும் அமெரிக்க எரிசக்தி அமைச்சர் சவுதி அரேபியா சென்று இது தொடர்பாக பேச்சுவார்த்தையை தீவிரப்படுத்தினார். இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து அணுசக்தி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்து உள்ளார்.



# வடக்கு மாசிடோனியாவில் அன்னை தெரசா நினைவிடத்தை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு பார்வையிட்டார்

வடக்கு மாசிடோனியாவில் அன்னை தெரசா நினைவிடத்தை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு பார்வையிட்டார். அதிபர் திரவுபதி முர்மு மூன்று நாடுகளுக்கு அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த 20-ந்தேதி மால்டோவா நாட்டிற்கு சென்ற அவர், அந்நாட்டின் அதிபர் மயா சந்துவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம், சுற்றுலா, தொழில்நுட்பம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். மால்டோவா பயணத்தை நிறைவு செய்த பின்னர், வடக்கு மாசிடோனியா அதிபர் கோர்டானா சில்ஜனோவ்ஸ்கா - டாவ்கோவா அழைப்பின் பேரில் அதிபர் திரவுபதி முர்மு 21ம் திகதி வடக்கு மாசிடோனியாவிற்கு சென்றார். இந்திய அதிபர் ஒருவர் மால்டோவா மற்றும் வடக்கு மாசிடோனியா ஆகிய நாடுகளுக்கு மேற்கொள்ளும் முதல் சுற்றுப்பயணம் இதுவாகும். வடக்கு மாசிடோனியாவில் திரவுபதி முர்மு 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இந்நிலையில் அங்குள்ள ஸ்கோப்ஜே நகரில் அமைந்திருக்கும் அன்னை தெரசா அருங்காட்சியகத்திற்கு திரவுபதி முர்மு சென்றார். இது தொடர்பாக இந்திய அதிபர் மாளிகையின் “எக்ஸ்” பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், “அதிபர் திரௌபதி முர்மு, வடக்கு மாசிடோனியாவின் அதிபர் கோர்டானா சில்ஜனோவ்ஸ்கா-டாவ்கோவாவுடன் இணைந்து ஸ்கோப்ஜேவில் உள்ள அன்னை தெரசா நினைவிடத்தைப் பார்வையிட்டார். அன்னை தெரசா ஸ்கோப்ஜேவில் பிறந்தார். அவர் 1928-ஆம் ஆண்டு வரை அங்கு வசித்து வந்தார்” என்று பதிவிடப்பட்டுள்ளது.

# அமெரிக்கா லெபனான் இடையே 40 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் விமான சேவை ஆரம்பம்!

அமெரிக்கா மற்றும் லெபனான் நாடுகளுக்கு இடையே, 40 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்க, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். கடந்த 1985ம் ஆண்டு, அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் ஆட்சிக் காலத்தில், மேற்காசிய நாடான லெபனானைச் சேர்ந்த போராட்டக்காரர்களால், “பிளைட் 847“ என்ற அமெரிக்க விமானம் கடத்தப்பட்டது அப்போது அமெரிக்க கடற்படை சிப்பாய் ஒரு வர் கொல்லப் பட்டார். இதனால் அமெரிக்கா, பாதுகாப்பு காரணங்களுக்காக லெபனான் உடனான நேரடி விமான சேவையை ரத்து செய்தது. தற்போது 40 ஆண்டுகளுக்கு பின், இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகையில் அதிபர் டிரம்பை லெபனான் அதிபர் ஜோசப் அவுன், சந்தித்து பேசிய பின், இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், ”லெபனான் பல தசாப்தங்களாக பல இன்னல்களை சந்தித்து, மோசமாக நடத்தப்பட்ட ஒரு நாடாகும். ”இனி அந்த நாட்டிற்கு உரிய மரியாதையும், முழு ஆதரவும் கிடைக்க அமெரிக்கா உறுதுணையாக இருக்கும்,” என தெரிவித்தார்.



# நூற்றாண்டு காலக் கல்விப் பாரம்பரியமும் ஒரு நூற்றாண்டு கால அரசியலும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

---

**சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் சுமந்திரனுக்கு காட்டப்பட்ட எதிர்ப்பானது அவர் பழைய மாணவர் அல்ல என்ற காரணத்தால் என்று கூறப்படுகிறது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள 75 வயதான ஒரு கட்சியின் பதில் செயலாளராக இருப்பவர், ஏறக்குறைய கட்சியின் தலைவரைப் போல செயல்படுகிறவர், மதிக்கப்படும் ஒரு சட்டத்தரணி, அவருக்கு அவருடைய சொந்த சமூகத்தில் காணப்படும் மதிப்பின் குறியீடாகவும் அந்த சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாமா? இதை இன்னும் ஆழமாகக் கேட்டால், தமிழ் அரசியலின் குறியீடாகவும் அதை எடுத்துக் கொள்ளலாமா? இருப்பதில் பெரிய கட்சி தன் கட்சிக்காரருக்கு எதிராகவே வழக்கு போடும் ஒரு நிலைமையில் இருக்கிறது. பெரும்பாலான ஆலய அறக்கட்டளைகளுக்குள் மோதல்கள். அந்த மோதல்கள் போலீஸ் நிலையம் வரை செல்கின்றன. அல்லது நீதிமன்றம் வரை செல்கின்றன. நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய திருச்சபைகளில் முக்கியமானது, தென்னிந்திய திருச்சபை. அதுவும் நீதிமன்றத்தில் நிற்கிறது. இதுதான் தற்போதைய "தமிழ்ச் சமூகத்தின் இருபபு".**

---

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதன் 150ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இந்த வைபவத்தை முன்னிட்டு ஒரு நடைபவனி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனை விருந்தினராக அழைத்திருந்தார்கள். அதனை பழைய மாணவர்கள் எதிர்த்தார்கள். பாடசாலை பழைய மாணவர் ஒருவரைத்தான் அவ்வாறு பிரதம விருந்தினராக அழைக்க வேண்டும் என்றும், பழைய மாணவர் அல்லாத ஒருவரை அழைக்கக்கூடாது என்று பழைய மாணவர்கள் எதிர்ப்புக் காட்டியதை அடுத்து சுமந்திரன் அழைக்கப்படவில்லை.

சுமந்திரன் அங்கே அழைக்கப்படக் காரணம் பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் பிரதேச சபை தவிசாளர் என்றும் கூறப்படுகிறது. சுமந்திரனை அந்த வைபவத்துக்கு அழைத்தது அவர்தான் என்றும் கூறப்படுகிறது. கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவே முன்னிட்டு நடக்கும் நிகழ்வுகளின் இறுதி நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகரனும் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்த ராஜாவும் முதலில் அழைக்கப்பட்டார்கள். அரச பிரதிநிதிகளை அந்த கொண்டாட்டங்களுக்கு அழைக்கலாம் என்றால் அதனை சமப்படுத்துவதற்கு தமிழரசு கட்சியை சேர்ந்த சுமந்திரனையும் அழைக்க வேண்டும் என்று பழைய மாணவர்களில் சிலர் விரும்பியதாகக் கூறப்படுகிறது. எனினும் இதுபோன்ற நிகழ்வுகளில் பழைய மாணவர்களை அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று சுட்டிக்காட்டிய பழைய மாணவர்கள் சுமந்திரன் அந்த வைபவத்துக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்படுவதற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். அதனால் சுமந்திரன் நடைபவனிகள் கலந்து கொள்ளவில்லை. இறுதி நாள் நிகழ்வில் அரச பிரதிநிதிகளும் அழைக்கப்படவில்லை என்று தெரிகிறது.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி எனப்படுவது கடந்த நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ திருச்சபைகளுக்கும் இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டி,மோதல் என்பவற்றின் விளைவாகத் தோன்றிய பள்ளிக்கூடங்களில் ஒன்று. ஆறுமுக நாவலரின் இந்து மறுமலர்ச்சிச் செயற்பாடுகளின் விளைவாக, சுழிபுரம் ஆங்கில இந்து கல்லூரி என்ற பெயரில் அது முதலில் தொடங்கப்பட்டது. பின்னர் 1892 அரச உதவிகளைப் பெறும் ஆங்கில பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது.

கடந்த இரண்டு நூற்றாண்டு காலப்பகுதிக்குள் நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய காரணிகளில் முக்கியமானது, பாடசாலைகளைக் கட்டும் மதங்களுக்கு இடையிலான போட்டியாகும். திருச்சபைகளுக்கும் இந்து மறுமலர்ச்சியாளர்களுக்கும் இடையிலான ஒரு வித மோதல் அல்லது போட்டி காரணமாக கட்டியெழுப்பப்பட்ட பாடசாலைகளின் விளைவுதான் இப்போதுள்ள நவீன யாழ்ப்பாணம்.

ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் யாழ். பரி.யோவான் கல்லூரி,யாழ் மத்திய கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, புனித சம்பத்திரிசியார் கல்லூரி, விக்டோரியா கல்லூரி.... போன்றன தமது நூறாவது ஆண்டு நிறைவை அல்லது 150ஆவது ஆண்டு நிறைவை அல்லது 200வது ஆண்டு நிறைவை கொண்டாடின, கொண்டாடுகின்றன.கிளிநொச்சி மத்திய கல்லூரி போன்றன வரும் ஆண்டில் நூறாவது ஆண்டைக் கொண்டாடவிருக்கின்றன. இவை யாவும் தமிழ் மக்களின் கல்வி பாரம்பரியத்தின் செழிப்பைக் காட்டுபவை.

இவ்வாறு பல முன்னணிப் பாடசாலைகள் 100 ஆவது ஆண்டு நிறைவை, 150ஆவது ஆண்டு நிறைவை, 200ஆவது ஆண்டு கால நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் கடந்த ஒரு நூற்றாண்டு கால அரசியல் எங்கே வந்து நிற்கிறது? தனது நூறாண்டு கால கல்வி பாரம்பரியத்தின் விளைவாக உலகம் வியக்கும் சான்றோர்களை உற்பத்தி செய்த ஒரு சமூகத்தின் அரசியலானது இப்பொழுது எங்கே வந்து நிற்கிறது?

இருப்பதில் பெரிய கட்சி தன் கட்சிக்காரருக்கு எதிராகவே வழக்கு போடும் ஒரு நிலைமையில் இருக்கிறது. பெரும்பாலான ஆலய அறக்கட்டளைகளுக்குள் மோதல்கள். அந்த மோதல்கள் போலீஸ் நிலையம் வரை செல்கின்றன. அல்லது நீதிமன்றம் வரை செல்கின்றன. நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய திருச்சபைகளில் முக்கியமானது, தென்னிந்திய திருச்சபை. அதுவும் நீதிமன்றத்தில் நிற்கிறது.




விக்டோரியா கல்லூரியில் சுமந்திரனுக்கு காட்டப்பட்ட எதிர்ப்பானது அவர் பழைய மாணவர் அல்ல என்ற காரணத்தால் என்று கூறப்படுகிறது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள 75 வயதான ஒரு கட்சியின் பதில் செயலாளராக இருப்பவர், ஏறக்குறைய கட்சியின் தலைவரைப் போல செயல்படுகிறவர், மதிக்கப்படும் ஒரு சட்டத்தரணி, அவருக்கு அவருடைய சொந்த சமூகத்தில் காணப்படும் மதிப்பின் குறியீடாகவும் அந்த சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாமா? இதை இன்னும் ஆழமாகக் கேட்டால், தமிழ் அரசியலின் குறியீடாகவும் அதை எடுத்துக் கொள்ளலாமா?

கடந்த இருநூறு ஆண்டுகளிலும் படிப்படியாகச் செதுக்கப்பட்ட நவீன யாழ்ப்பாணமானது அதன் அரசியலில் எங்கே நிற்கிறது? கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கைத் தீவில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பு ஆகிய யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரசானது நாட்டின் முதலாவது பொதுத் தேர்தலை பகிஷ்கரித்தபோது ஒரு சிங்களத் தலைவரான பிலிப் குணவர்த்தன. "யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது" என்று வியந்து கூறினார். ஆனால் தமிழ் தேசிய அரசியல் இப்பொழுது அவ்வாறு கூறத்தக்க நிலையில் உள்ளதா?

கடந்த இரண்டு நூற்றாண்டு காலக் கல்வியின் விளைவாக தற்போது உள்ள தமிழ் அரசியல் உள்ளதா? நீங்கள் நாவலர் வீதி வழியாகப் போனால், அதன் சுற்றயல் வீதிகளில் காணப்படும் தனியார் கல்வி நிறுவனங்களின் பெயர்களை வாசியுங்கள். "விஞ்ஞான மண்டபம்", "விஞ்ஞான உலகம்", "விஞ்ஞான அருவி", "விஞ்ஞான சமுத்திரம்", "ஞானம்", "தொழில் நுட்ப உலகம்". இந்த அளவுக்கு விஞ்ஞானத்தின் மீதும் கணிதத்தின் மீதும் தாகமுடைய ஒரு சமூகம், தனது நிகழ்கால வாழ்வையும் எதிர்கால வாழ்வையும் தீர்மானிக்கும் அரசியலில் விஞ்ஞானபூர்வமாகவும் கணிதபூர்வமாகவும் முடிவுகளை எடுக்கின்றதா?

விடயங்களை விஞ்ஞானபூர்வமாக, அறிவுபூர்வமாக, தர்க்கபூர்வமாக அணுகும் ஒரு சமூகம் தனக்குள் தானே மோதிக் கொண்டிருக்குமா? தானே தனக்கு எதிராக வழக்கு போட்டுக் கொண்டிருக்குமா? கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலான தமிழ் அரசியலை தொகுத்து பார்த்தால் என்ன தெரிகிறது?

தமிழ் மக்கள் ஏன் தங்கள் அரசியல் இலக்குகளை வெற்றி கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்? செழிப்பான ஒரு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு சமூகம் ஏன் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக வெற்றிபெற முடியாத ஒரு சமூகமாகக் காணப்படுகிறது?

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் 1985 இல் தொடங்கி 2009 வரையிலுமான 24 ஆண்டு கால பகுதிக்குள் ஒரு கருநிலை அரசு நிலவியது. பின்னர் 2009இல் அதுவும் தோற்கடிக்கப்பட்டது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய படைத்துறை வெற்றிகளுக்கும் அப்பால் தமிழ்மக்கள் தங்கள் இறுதி இலக்குகளை அடைய முடியாத மக்களாகவே தொடர்ந்தும் காணப்படுகிறார்கள்.

கடந்த மாதம் வட்டுக் கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு நினைவு கூறப்பட்டது.கடந்த 50 ஆண்டுகளிலும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்து போராடிய தமிழ் மக்கள் அத்தீர்மானத்தின் இறுதி இலக்கை அடைய முடியவில்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய மிதவாத தலைவர்களில் ஒரு பகுதியினர் இயற்கை மரணமடைந்தார்கள். ஒரு பகுதியினர் கொல்லப்பட்டார்கள். அந்தத் தீர்மானத்தை முன்வைத்து பெறப்பட்ட மக்களானையைப் பின்பற்றி ஆயுதம் ஏந்திப் போராடிய இயக்கங்களின் பிரதான தலைவர்கள் யாருமே இப்பொழுது பூமியில் இல்லை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்து, கடந்த 50 ஆண்டுகளையும் தொகுத்து ஆராய்ந்தால், தமிழ்த் தேசிய அரசியலின் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் அதற்குரிய காரணங்களையும் கற்றுக்கொள்ளலாம். கல்விச் செழிப்பு மிக்க ஒரு சமூகம், உலகம் வியக்கும் சான்றோர்களை உற்பத்தி செய்த ஒரு சமூகம், முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு போராட்டத்தை நடாத்திய சமூகம், கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அதன் அரசியல் இலக்குகளை முழுமையாக அடைய முடியாது தடுமாறுகிறது. இந்த ஒரு நூற்றாண்டு கால அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டிய பொறுப்பு தமிழ்ச் சமூகத்தில் உள்ள சான்றோருக்கும் அரசியல்வாதிகளுக்கும் படைப்பாளிகளுக்கும் உண்டு.

---



# செம்மணிப் புதைகுழி தளத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## - அகழ்வுப் பணிகளை நேரில் ஆராய்வு.
## - சர்வதேச விசாரணை கோரி செம்மணியில் மக்கள் போராட்டம்!



**- ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் - செம்மணி, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் மற்றும் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து நாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட 8 உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் இன்று புதன்கிழமை நேரில் பார்வையிட்டனர்.

செம்மணி, சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் நேரில் பார்வையிட அனுமதி கோரி, கடந்த வெள்ளிக்கிழமை காணாமல்போனோர் அலுவலகச் சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த நீதிமன்றம், அன்றைய தினமே அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது.

இதற்கமைய, இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரேனோ, ஜேர்மனித் தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியுமன், பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட், இத்தாலித் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக் மற்றும் நெதர்லாந்து தூதுவர் விபே டி போயர் ஆகியோர் அகழ்வுப் களத்துக்குச் சென்றனர்.

இவர்களுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதித் தூதுக்குழுத் தலைவர் திருமதி கலியா அகிஷேவா, ஒத்துழைப்புப் பிரிவுத் தலைவர் கலாநிதி ஜோஹன் ஹெஸ், தொடர்பாடல் ஒருங்கிணைப்பாளர் செல்வி சாரா பொன்சேகா சில்வா உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் இந்தப் பகுதியைப் பார்வையிட்ட தூதுவர்கள் குழுவினர், அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிபுணர் குழுவினரையும் சந்தித்துக் கலந்துரையாடி நிலவரங்களைக் கேட்டறிந்தனர்.

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் இன்று வருகை தந்திருந்த நிலையில், அவர்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் செம்மணி வளைவுப் பகுதியில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பையும் கோரிக்கைகளையும் வெளிப்படுத்தினர்

### உறவுகளை ஆரத்தழுவிக் கண்கலங்கிய ஐரோப்பிய ஒன்றியத் தூதர் மொரேனோ

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் மற்றும் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து நாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து மகஜரையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக, இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரேனோ, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் நெதர்லாந்து நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரிகள் என 8 உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

தூதுவர்களின் வருகையையொட்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரும் சிவில் அமைப்புக்களும் இணைந்து செம்மணி - சித்துப்பாத்தி மயானத்துக்கு முன்னால் ஏ-9 வீதியோரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, போராட்டம் நடைபெற்ற பகுதிக்குச் சென்ற தூதுவர்கள் குழுவினர், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயான வாயிலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ உறவினர்களை ஆரத்தழுவிக் கண்கலங்கியமையுடன், அவர்களின் கோரிக்கைகளையும் கவனமாகக் செவிமடுத்தார். தொடர்ந்து, பாதிக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் சார்பில் தூதுவர்களிடம் கோரிக்கை மகஜரும் கையளிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் மற்றும் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து நாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து மகஜரையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக, இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரேனோ, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் நெதர்லாந்து நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரிகள் என 8 உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

தூதுவர்களின் வருகையையொட்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரும் சிவில் அமைப்புக்களும் இணைந்து செம்மணி - சித்துப்பாத்தி மயானத்துக்கு முன்னால் ஏ-9 வீதியோரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, போராட்டம் நடைபெற்ற பகுதிக்குச் சென்ற தூதுவர்கள் குழுவினர், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயான வாயிலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ உறவினர்களை ஆரத்தழுவிக் கண்கலங்கியமையுடன், அவர்களின் கோரிக்கைகளையும் கவனமாகக் செவிமடுத்தார். தொடர்ந்து, பாதிக்கப்பட்ட





உறவினர்களின் சங்கம் சார்பில் தூதுவர்களிடம் கோரிக்கை மகஜரும் கையளிக்கப்பட்டது.



# 'தி ஒடிஸி' ஆங்கிலத் திரைப்படம் பார்த்தேன்!

## பகிர்ந்தேன் இதோ. உங்களுக்காக!

**கனடா - குரு அரவிந்தன்**



கனடா ஒன்ராறியோவில் வோன் பகுதியில் உள்ள சினிப்ளெக்ஸ் திரையரங்கில் "தி ஒடிஸி" (The Odyssey) முதல் நாள் முதல்காட்சி பார்ப்பதற்கு எனது வாசகர் வட்ட நண்பர் ஒருவர் அழைத்திருந்ததால், அந்தப் படத்தைச் சென்று பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தக் காட்சிக்கான சீட்டுக்கள் விற்பனையாகி முடிந்திருந்தன. அவரும் கனடிய தமிழ் திரைப்படத்துறையில் அனுபவம் மிக்கவர். அவருக்காக அவர் தயாரித்த படங்களுக்குத் திரைக்கதை வசனமும் எழுதியிருக்கின்றேன். இப்படியான பிரபலமான பிரமாண்டமான படங்கள் வெளிவரும் போது சென்று பார்ப்பது வழக்கம். பொதுவாக எனக்கு நேரம் கிடைக்கும் போதுதான் படம் பார்ப்பேன், ஆனால் இம்முறை முதல் நாளே பார்க்க (17-7-2026) அவர் மூலம் சந்தர்ப்பம் கிடைத்ததால் சென்று பார்த்தேன். பல்லின மக்களாலும் திரையரங்கம் நிறைந்து இருந்தது. படம் முடிந்தபின் அவர்களில் சிலருடன் இந்தத் திரைப்படம் பற்றி உரையாடவும் முடிந்தது.

இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவர்கள் பல காவியங்கள், காப்பியங்களைப் படித்திருப்பார்கள். இவற்றில் சில திரைப்படங்களாகவும் வெளிவந்திருந்ததையும் பார்த்திருப்பார்கள். வாசிப்பு அனுபவம் காட்சி மொழி அனுபவத்தைவிட முக்கியமானது என்பதையும் புரிந்து கொண்டிருப்பார்கள். மொழி மாற்றம் செய்யப்பட்ட கதை என்றால் அங்கேயும் பொதுவாகத் தளர்வுக்கு இடமுண்டு. வாசிப்பு அனுபவம் என்பது கதை ஓட்டத்தைப் பார்த்து மிகுதியை நாங்கள் கற்பனை செய்து பார்ப்பது. காட்சி மொழி என்பது நெறியாள்கை செய்பவரின் கற்பனையில் உதித்ததைக் காட்சி மொழியில் பார்ப்பது. சில நேரங்களில் நாங்கள் நினைத்ததைவிட வித்தியாசமாக இருக்கிறதே என்று பாராட்டுவோம், சில நேரங்களில் காட்சிகளில் கருத்து முரன்பாடு ஏற்படும் போது அலுத்துக் கொள்ளுவோம். ஆனால் சரியோ பிழையே ஒவ்வொருவருடைய திறமையும் கட்டாயம் பாராட்டப்பட வேண்டும். அந்த வகையில் இந்தப்படத்தின் சில சிறப்பு அம்சங்களைப் பாராட்டியே ஆகவேண்டும்.

திரைப்படத்துறையில் ஆர்வம் இருப்பதால், ரசிகர்களின் கருத்தையும் அவ்வப்போது கேட்டுத் தெரிந்து கொள்வேன். ஒரு திரைப்படத்தை எடுப்பது என்பது எவ்வளவு கடினமாகது என்பது இந்தத் துறை சார்ந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். இத்துறையில் அனுபவமுள்ள நண்பருடன் லொஸ்ஏஞ்சலில் உள்ள வார்னர் பிறதேர்ஸ் திரைப்பட நிறுவனத்திற்குச் (டிஸ்கவரி.இங்) சென்ற போது பல விடயங்களை அங்கே அறிந்து கொள்ள முடிந்தது. படப்பிடிப்புகளைப் பார்க்கவும், அவர்கள் பயன்படுத்து நவீன கமெராக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால்தான் நவீன கமெராக்களின் உதவியுடன் எடுக்கப்பட்ட இந்தப்படம் பற்றி எழுத முற்பட்டேன்.

இந்தத் திரைப்படம் "ஐமேக்ஸ்" தரத்தில் (இமேஜ் மக்ஸிமம்) வெளிவந்திருக்கிறது. "இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட திரைப்பட வடிவங்களிலேயே "ஐமேக்ஸ்" தரம்தான் மிகச் சிறந்தது, எந்தத் தொழில்நுட்பமும் இதுவரை இதற்கு ஈடாக இல்லை." என்று இந்தப் படத்தின் இயக்குனரான ஆஸ்கார் விருது பெற்ற கிறிஸ்டோபர் நோலன் குறிப்பிட்டிருந்தார். முதன் முதலாக 1970 களில் "ஐமேக்ஸ் கார்ப்பரேசன்" என்ற கனடிய நிறுவனத்தால் இந்தத் தொழில் நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டது. ஐமேக்ஸ் வசதிகளில் சிலவற்றைக் கொண்ட திரையரங்கம் என்பதால் அதன் தரத்தை இன்று இந்தப் படத்தில் காணமுடிந்தது.

ஐமேக்ஸ் திரையரங்கிற்கும் 3டி திரையரங்கிற்கும் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. ஐமேக்ஸ், துல்லியமான ஒலி நிலைப்படுத்தல் மற்றும் சக்திவாய்ந்த அளவவிடக்கூடிய அமைப்பைக் கொண்ட, நுட்பமாக வடிவமைக்கப்பட்ட ஒலி அமைப்பைப் பயன்படுத்துகிறது. வெடிப்புகள், இசை மற்றும் உரையாடல்கள் அனைத்தும் அதிக தாக்கத்தையும் ஆழ்ந்த அனுபவத்தையும் ரசிகர்களுக்குத் தருகின்றன. 3டி படம் முக்கியமாக ஆழப் பார்வையை மேம்படுத்துகிறது, இதனால் பொருள்கள் திரையில் இருந்து வெளியே வருவது போலவோ அல்லது திரைக்குள் நீண்டு வருவது போலவோ தோன்றும். இது அதிரடி, அனிமேசன் மற்றும் அறிவியல் புனைகதைத் திரைப்படங்களுக்கு மிகவும் சிறந்தது. 3டி படம் பார்க்கும் போது அணிந்து கொள்ள அதற்கான கண்ணாடியும் திரையரங்கில் தருவார்கள்.

"தி ஒடிஸி" திரைப்படம், "ஐமேக்ஸ் கெய்லி பிலிம் கமரா" என்ற புதிய பதிப்பு உட்பட, முழுவதுமாக ஐமேக்ஸ் பிலிம் கமராக்களைக் கொண்டு படமாக்கப்பட்ட முதல் முழு நீளத் திரைப்படமாகும். இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் ஹோய்ட் வான் ஹோய்டெமா, "இந்தத் தயாரிப்பில் இந்தக் கமராவே மிக அத்தியாவசியமான உபகரணம்" என்று குறிப்பிட்டிருந்தார். சுமார் 2.1 மில்லியன் அடி பிலிமில் படமாக்கப்பட்ட "தி ஒடிஸ ி", என்ற இந்த திரைப்படம் கைவினைத்திறனின் ஒரு உண்மையான காவியக் கதையாகும். காட்சிப்படுத்தப்பட்ட இந்தப் படத்தின் பிலி-மின் நீளம் ரொரன்ரோவிலிருந்து நியூயோர்க் நகரத்திற்குச் செல்லும் தூரத்தை விட நீளமானது என்று அவர் வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.




பொதுவாக, ஐமேக்ஸ் கமராக்கள் அதிக சத்தம் எழுப்புபவை, பருமனானவை மற்றும் விலை உயர்ந்தவை. இந்தக் கமராக்கள் அதிக சத்தத்தை ஏற்படுத்துவதால், இந்த வடிவத்தில் உரையாடல்களைப் படமாக்குவது கடினமானது. இதனால்தான் பெரும்பாலான திரைப்படங்கள் பெரிய அதிரடிக் காட்சிகளுக்கு மட்டுமே ஐமேக்ஸ் கமராக்களைப் பயன்படுத்துகின்றன. அதனால்தான் இந்தத் திரைப்படத்தில், நோலன் சத்தத்தைக் குறைப்பதற்காக "பிளிம்ப்" எனப்படும் ஒரு உறைக்குள் கேமராவை வைத்து இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருக்கின்றார். இன்றைய திரைப்படங்களில் நவீன தொழில் நுட்பமே முக்கிய இடம் வகிக்கின்றது.

ஹோமரின் இரு பெரும் கிரேக்க காப்பியங்களான "இலியட்" மற்றும் "ஒடிஸி" பற்றி அறிந்திருப்பீர்கள். இந்தப் படத்தில் வரும் சில காட்சிகள் சின்ன வயதில் மாணவப்பருவத்தில் நாங்கள் படித்த கதைகளின் காட்சிகளாக இருந்தன. முக்கியமாக இத்தாக்காவின் அரசன் ஒடிசியசும் வீரர்களும் சைக்குளோப்ஸ் என்ற ஒரு தீவில் உள்ள பாலிபெமஸ் என்ற ஒற்றைக்கண் கொண்ட இராட்சதனின் குகைக்குள் அகப்பட்டுக் கொள்வார்கள். அவனது கண்ணைக் குருடாக்கிவிட்டு செம்மறி ஆடுகளுடன் சேர்ந்து மந்தைகள் போல அவர்கள் தப்பிப் போவார்கள். "முரட்டுத்தனத்தை அறிவு வெல்லும்" என்பதை இது எடுத்துச் சொல்லும். இன்னுமொரு இடத்தில் ஒடிஸி காப்பியத்தில் வரும் பெரிய ட்ரோஜன் குதிரை ஒன்றை மரத்தில் செய்து தோல்வியடைந்த அவர்கள் அதற்குள் ஒளித்திருப்பார்கள். எதிரிப்படையினர் ஆச்சரியப்பட்டு அந்தப் பிரமாண்டமான குதிரையை அரண்மனைக்குள் இழுத்துச் செல்வார்கள். இரவு நேரத்தில் இவர்கள் வெளியே வந்து அரண்மனையைக் கைப்பற்றுவார்கள். இந்தக் கதை ஏனீட் காவியத்தில் தான் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியாக எமக்குத் தெரிந்த இது போன்ற சில குட்டிக் கதைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

ஒரு நாடக அரங்கில் கதை சொல்லியுடன் ஆரம்பித்த கதை இடைஇடையே கதை சொல்லி மூலம் காட்சிகளைக் காண்பித்தபடி நகருகின்றது. திரையரங்கின் ஒளி, ஒலி அமைப்பு முக்கியம் என்பதால், ஓரளவு அந்த வசதிகளைக் கொண்ட இந்தத் திரையரங்கில் அதை ரசிக்க முடிந்தது.

ஹோமரின் ஒடிஸியை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் படத்திற்கு திரைக்கதை எழுதி, படத்தை கிறிஸ்டோபர் நோலன் இயக்கியிருக்கின்றார். கிறிஸ்டோபர் நோலன், எம்மா தாமஸ் ஆகியோர் இணைந்து தயாரித்து இருக்கிறார்கள். லுட்விக் கோரன்சனின் இசையில் மேட் டேமன், டாம் ஹாலண்ட், ஆன் ஹேத்வே, ராபர்ட் பேட்டின்சன், லுபிடா நியாங்கோ, சமந்தா மார்டன், ஜெண்டாயா, சார்லிஸ் தெரான் ஆகியோர் முக்கிய பாத்திரங்களை ஏற்றிருக்கின்றனர். ஒளிப்பதிவு ஹோய்ட் வான் ஹோய்டெமாவும் படத்தொகுப்பை ஜெனி.்.பர் லேமவும் ஏற்றிருக்கின்றனர்.

இந்தப் படத்திற்கான படப்பிடிப்பு மொராக்கோ, கிரீஸ், இத்தாலி, ஸ்காட்லாந்து, ஐஸ்லாந்து, மேற்கு சஹாரா மற்றும் மால்டா ஆகிய இடங்களிலும், லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள யுனிவர்சல் ஸ்டுடியோஸ் வளாகத்திலும் நடைபெற்றது. சுமார் 250 மில்லியன் டாலர் பட்ஜெட்டில் உருவான "தி ஒடிஸி", நோலனின் திரைப்பயணத்தில் மிகவும் அதிக செலவில் தயாரிக்கப்பட்ட படங்களில் ஒன்றாகும்.

அதிக பணச் செலவில் எடுத்த படம் என்பதாலும், நவீன தொழில் நுட்பம் இடம் பெற்றிருப்பதாலும், ஒலி, ஒளி அமைப்புகள் திறம்பட இருந்ததாலும் படம் சிறப்பாக இருக்கின்றது. ஆனால் எடுத்த காட்சிகள் எல்லாவற்றையும் தொகுத்து



ஒரே படத்தில் காட்ட வேண்டும் என்பதில்லை. இந்தப் படம் 173 நிமிடங்களுக்கானது. முன்பு எடுக்கப்பட்ட தமிழ்ப்படங்கள் போல சுமார் 3 மணித்தியாலங்கள் காட்சிப் படுத்தப் பெற்றது. இன்றைய காலகட்டத்தில் முன்னேறிய நாடுகளில் 3 மணித்தியாலங்களை யாரும் திரையரங்கில் செலவிட விரும்ப மாட்டார்கள். தேவையில்லாத உரையாடல்களைத் தவிர்த்து படத்தை இரண்டு மணித்தியாலமாக மாற்றியிருந்தால் இன்னும் ரசித்துப் பார்த்திருக்கலாம் என ஒரு ரசிகனாக நான் நினைக்கின்றேன். இதைத்தான் படம் பார்த்த சில ரசிகர்களும் குறிப்பிட்டார்கள். ஆனாலும் அனைவரின் கடின உழைப்பிற்கும் எனது பாராட்டுக்கள்.

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ

## SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3



## ஆடி அமாவாசை
## பிதிர்தர்ப்பண மோட்ச சாந்தி வழிபாடு
## 11.08.2026 செவ்வாய்க்கிழமை

**ஆடி அமாவாசை தினத்தில் இறைபதம் அடைந்த நம் முன்னோர்களை நினைந்து, பிதிர்தோஷங்கள் நீங்க பிதிர் தர்ப்பணம் செய்து மோட்ச தீபம் ஏற்றி மோட்ச சாந்தி வழிபாடு செய்வது சிறந்தது.**

ஆடிஅமாவாசை விரத தினத்தை முன்னிட்டு காலை 7:45 மணி முதல் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், 10:00 மணிக்கு விஷேட பூஜை, தொடர்ந்து வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**காலை 7:00 மணிமுதல் 1:00 மணிவரை ஆலயத்தில் பிதிர்தர்ப்பண மோட்ச சாந்தி வழிபாடுகள் செய்யலாம். அடியார்களின் காலதாமதத்தைத் தவிர்க்கப் பல சிவாச்சார்யர்களை ஆலயம் ஒழுங்கு செய்துள்ளது.**



## ஆடிப்பூரம் 14.08.2026 வெள்ளிக்கிழமை
## அம்பாளுக்கு நடைபெறும் ருதுசாந்திப் பெருவிழா

ருதுசாந்திப் பெருவிழாவில் நாகபூஷண கருமாரி அம்பாளுக்கு காலை 6:30 மணிமுதல் கும்பபூஜை, திரவிய அபிஷேகம் கணபதி ஹோமம், துர்க்காசூக்த ஸ்ரீசூக்த ஹோமம் நடைபெற்று மூலிகைகள், வாசனைத்-திரவியங்கள், நவரத்தினங்கள், பஞ்சலோகங்கள், வாசனை மலர்கள், மூலிகை வேர்வகைகள், மூலிகை இலைகள் நிறைந்த 108 கலசங்கள் பூஜை செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்தவரும் ஒவ்வொரு கலசம் (குடம்) ஏந்தி வீதிவலமாக வந்து ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு ருதுசாந்தி - மங்கள நீராட்டு விழா நடைபெறும்.

மாலை 5:00மணிமுதல் விஷேட பூஜையும், 6:00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ருதுசாந்திப் பெருவிழா 64 விதமான (சதுஸ்சஷ்டி) உபசாரங்களும் சமர்ப்பித்து விஷேட வழிபாடுகள் நடைபெறு அன்னை சிவலிங்க பூஜை வடிவினளாக கைலாச வாகனத்தில் வீதிவலம்வரும் அருட்காட்சியும் நடைபெறும்.

## 21.08.2026 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
## சுமங்கலி பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



காலை 7:30 மணிமுதல் வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், சப்பறத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜைகளும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரத நூல் கட்டுதல் என்பன நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
## 14.08.2028 வெள்ளி முதல் 23.08.2026 ஞாயிறு வரை



**மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி 10 தினமும் மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.**

| கைலாச வாகனக்காட்சி | சப்பற அலங்காரக் காட்சி | தேர் அலங்காரக் காட்சி |
|---|---|---|
| 14.08.2026 வெள்ளி | 21.08.2026 வெள்ளி | 22.08.2026 சனிக்கிழமை |
| மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப | மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப | காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப |

416.291.8500 vinaayagar.com vinaayagar

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

## அஹ்சானுல் ஹாஃபிஸ்

ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association

LIBERAL

# AHSANUL HAFIZ

THE CANDIDATE FOR YOU IN SCARBOROUGH SOUTHWEST



## Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.




Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கணகம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரத்துவமாது திருமதி சுபத்திராதேவி மாயா திரவியம்

(நாச்சிமார் கோவிலடி- யாழ்ப்பாணம்)



எமது குலவிளக்கு அமரத்துவம் அடைந்து ஓராண்டு பூர்த்தியாகின்றது. தன் வாழ்நாள் முழுதும் எமது குடும்பத்திற்காக சகல வழிகளிலும். தன்னாலியன்ற பணிகளைச் செய்து தனது கணவர் மற்றும் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காகவும் பணிகள் செய்த குடும்ப விளக்கு அணைந்து ஓராண்டைக் கடக்கும் இந்நாளில் அவரது நினைவுகள் மட்டும் எம்மைவிட்டு அகலாது உள்ளன.

அமரத்துவமாது சுபத்திராதேவி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனையும் மதிய போசனமும் 26-07-2026 ஞாயிற்றுக்கிழமை. மதியம் ஸ்காபறோ - பேர்ச்சமவுண்ட் வீதியில் உள்ள கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் அதில் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

*அன்புடைய துணைவியே எம்மை அணைத்து வளர்த்த அன்னையே*
*என்றும் எங்கள் நலன் கருதி எண்ணிப் பணிசெய்த தேவியே!*
*துன்பங்கள் எம்மைத் தீண்டிடாமல் தெய்வத்தை துதித்தவரே!*
*தூரதேசம் சென்ற தந்தையின் கடமையைத் தன்னில் சுமந்தவரே!*
*உறவினர் அயலவருடன் இயல்பாய் உறவாடி மகிழ்ந்தவரே!*
*உதவுவதில் உடனுக்குடன் முன்வந்து நின்றவரே!- வாழ்வின்*
*நெறிகளை வள்ளுவனின் வரிகளாய் கடைப்பிடித்து வாழ்ந்தவரே!*
*நொடியேனும் எமை விலகா வாழ்ந்தவரே தொடர்க விண்ணிலும்!*

மண்ணில்:- 09-05-1942
விண்ணில் 06-08-2025

இங்ஙனம்,
என்றும் மறவாத உங்கள் நினைவுகளுடன்
கணவர், மக்கள், மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்



# சிங்களத்தின் வெறியாட்டமும் தமிழினத்தின் ஆறாத வடுக்களும்!




*"1983 ஜூலை 23 முதல் ஜூலை 30 ஆம் திகதி வரை தமிழர்களுக்கு நடந்த கொடூரங்களை இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகின்றது "கறுப்பு ஜூலைக் கலவரம்" என்ற தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாக, தீராத வலியாக இன்றும் கனன்று கொண்டிருக்கின்றது. இந்த ஜூலைக் கலவரம் நடந்தேறி 43 வருடங்கள் கடந்துவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் வரும்போதும் ஜூலை என்றதுமே தமிழர் மனங்கள் வேதனையால் வெம்பி வெடிக்கின்றன" தமிழர்களை உயிரோடு எரித்துக் கொன்று சிங்களக் காடையர்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்கள் கொழும்பிலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. தலைநகர் எங்கும் தீச் சுவாலைகளின் புகை மண்டலம். சிங்களக் கடைகளில் "தமிழனின் கறி கிடைக்கும்" எனப் பலகையில் எழுதி வைத்து சிங்களக் காடையர்கள் எக்காளமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்கள் உயிர்களைப் பாதுகாக்க பாடசாலைகள், ஆலயங்களை நோக்கி தஞ்சம் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர். நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழர்கள் கொழும்பிலுள்ள தமது உறவுகளுக்கு என்ன நடந்ததோ, உயிருடன் இருக்கின்றார்களோ இல்லையோ எனத் தெரியாது கதறிக் கொண்டிருக்கின்றனர்."*

---------------------------------------------------------------------------- **கே.பாலா -**

இலங்கையின் வரலாற்றில் 1983 ஜூலை என்பது வெறும் நாட்காட்டியின் ஒரு பக்கம் அல்ல. அது ஒரு தேசத்தின் ஆன்மாவில் எழுதப்பட்ட ஆறாத வடு. கொழும்பு வீதிகளில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலை, வெறும் உயிர்களையும் உடைமைகளையும் மட்டும் காவு வாங்கவில்லை. மாறாக, "இலங்கையர்" என்ற பொது அடையாளத்தின் கீழ் தமிழர்கள் கொண்டிருந்த கடைசி நம்பிக்கையையும் சேர்த்து எரித்து சாம்பலாக்கியது.

43 வருடங்களுக்கு முன்னர் இதே நாள் இலங்கையின் தலைநகர் கொழும்பை தமிழர்களின் மரண ஓலங்கள், உயிர்ப்பிச்சை கேட்கும் கதறல்கள், தமது மானத்தை காப்பதற்கான தமிழ் பெண்களின் அலறல்கள் அதிர வைத்துக்கொண்டிருக்கின்றன. வாகனங்களில் சென்ற தமிழர்கள் வழிமறித்து உயிரோடு எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் ,வாக்காளர் பட்டியலை வைத்துத் தமிழர்களை அடையாளம் கண்டு வீடுகளிலிருந்து இழுத்தெடுத்து வெட்டித் துண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள், குழந்தைகள் கதறக் கதற தலைகீழாகத் தூக்கி நிலத்தில் அடித்துக் கொல்லப்படுகின்றார்கள். பெற்றோருக்கு முன்பாக மகள்களும் கணவர்களுக்கு முன்பாக மனைவிகளும் சகோதரர்களுக்கு முன்பாக சகோதரிகளும் சிங்களக் காடைக் கும்பல்களினால் நிர்வாணமாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு, வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர்களை உயிரோடு எரித்துக் கொன்று சிங்களக் காடையர்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்கள் கொழும்பிலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. தலைநகர் எங்கும் தீச் சுவாலைகளின் புகை மண்டலம். சிங்களக் கடைகளில் "தமிழனின் கறி கிடைக்கும்" எனப் பலகையில் எழுதி வைத்து சிங்களக் காடையர்கள் எக்காளமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்கள் உயிர்களைப் பாதுகாக்க பாடசாலைகள், ஆலயங்களை நோக்கி தஞ்சம் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர். நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழர்கள் கொழும்பிலுள்ள தமது உறவுகளுக்கு என்ன நடந்ததோ, உயிருடன் இருக்கின்றார்களோ இல்லையோ எனத் தெரியாது கதறிக் கொண்டிருக்கின்றனர்.

தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர்களின் வணிக நிலையங்களும் என கொழும்பு கோரமாய்க் காட்சியளித்துக்கொண்டிருந்த நிலையில் இன்னொரு குரூரமும் ஜூலை 25ஆம் திகதி நடந்தேறியது. கொழும்பின் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான ரெலோ இயக்கத் தலைவர்களான குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், உட்பட 37 பேரை வெலிக்கடை சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு அவர்கள் அளித்த ஆயுதங்களோடு அங்கிருந்த சிங்களகைதிகள் மிகக் கொடூரமாக படுகொலைசெய்தனர். நான் மரணித்தால் எனது கண்களை ஒரு தமிழனுக்கு கொடுங்கள் அதன் மூலம் நான் தமிழீழத்தை பார்க்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கூறிய குட்டிமணியின் கண்கள் பிடுங்கி எறியப்பட்டன. அந்த நாளோடு மட்டும் அந்தக் கொடூரம் முடியவில்லை. மீண்டும் ஜூலை 28ஆம் திகதியும் வெலிக்கடை சிறையில் தமிழினப்படுகொலை நடத்தப்பட்டது. 18 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறாக வெலிக் கடை சிறையில் 55 தமிழ் கைதிகள் சிங்கள இனவெறிக்கு இரையானர்கள்.




1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாக தலைநகர் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இந்த தமிழினப்படுகொலை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது. 13 சிங்கள இராணுவத்தினரின் உயிர்களுக்காக மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை, சிங்கள இனவெறியர்கள் கண்டந்துண்டமாக வெட்டி வீசினார்கள். குடும்பம், குடும்பமாக தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள். 500க்கும் மேற்பட்ட தமிழ்ப்பெண்கள் ஈவிரக்கமின்றி இந்த வெறியர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள், திரையரங்குகள் என 5000க்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து சூறையாடினார்கள். தீக்கிரையாக்கினார்கள். தப்பிய தமிழர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு உங்கள் நாட்டுக்கு ஓடுங்கள் என வடக்கிற்கு விரட்டப்பட்டார்கள்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவமே தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலையை தோற்றுவித்ததாக கூறப்பட்டாலும் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசினால் இந்த இனப்படுகொலை திருநெல்வேலி தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. திருநெல்வேலித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலேயே அவர்கள் உடல்களை அடக்கம் செய்ய இராணுவத்தினர் விரும்பிய போதும், அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனே அவர்களது உடலை கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியில் பார்வைக்கு வைத்து அடக்கம் செய்ய முடிவெடுத்தார். ஜெயவர்த்தனா அரசு இராணுவத்தினரின் மரணத்தை தமிழருக்கு எதிரான இனவெறி தூண்டும் நிகழ்வாக மாற்றியது.


எந்த இராணுவ வீரர்கள் மறைவிற்கும் கடைப்பிடிக்காத புதிய முறைகளில் இந்த இராணுவத்தினருக்கு இறுதி ஊர்வலம் நடந்தது. சவப்பெட்டியில் எடுத்து வராமல் வேண்டுமென்றே சூழ்ச்சியுடன் பொலித்தீன் பைகளில் இராணுவத்தினரின் உடல்களை கட்டிக் கொண்டு வந்தார்கள். இருட்டும் வரை இறுதி ஊர்வலத்தை தாமதப்படுத்தி சிங்களவர்களிடம் கொதிப்புணர்வை தூண்டச் செய்தார்கள். இந்த தாமதம் பெரும்பாலான சிங்களவர்களை கொழும்பை நோக்கி வரச் செய்வதற்கு போதுமான காலமாக இருந்தது. அரச பயங்கரவாதிகளின் குரூரப் புத்தியால் தூண்டப்பட்ட சிங்கள வெறியர்களால் அப்பாவித் தமிழர்களின் இரத்தம் கொழும்பு வீதியெங்கும் அன்று ஆறாக ஓடியது.

இவ்வாறாக இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மலையகத்தின் சில பகுதிகளிலும் 1983 ஜூலையில் நடந்த கொடூரங்கள் வெறும் கலவரம் அன்று. அது உள்நாட்டுப் போரின் தொடக்கம். தமிழர் என்ற அடையாளமே சிங்கள வெறியர்களுக்கு வெறியேற்றிய நாள். சிங்களம் -தமிழ் என்ற இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ்வதில் ஏற்பட்டுவிட்ட முடிவு. 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு சிங்களப் பேரினவாத அரசாலும், சிங்கள இனவெறியர்களாலும் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இந்தக் கொடூரங்கள் அரங்கேற்றப்பட்டு.தற்போது 43 வருடங்கள்.நிறைவடைந்துள்ளன.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, அமைச்சர்களான சிறில் மத்யு, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி என, அனைவரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் 1983 "கறுப்பு ஜூலை" இன அழிப்பை பல வகைகளில் நியாயப்படுத்தினர் அதற்காக வருத்தப்படவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் தரவோ முயலக்கூட இல்லை. இந்த தமிழினப்படு கொலையின் பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரிட்டன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் சிங்களத்தின் கோர முகத்தை வெளிப்படுத்தியது.

அந்த நேர்காணலில் "இப்போது யாழ்ப்பாணத்தவர்களின் எத்தகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அவர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லை. தமிழர்களைப் பட்டினி போட்டால், சிங்களவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்" என ஜே.ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி இந்த தமிழினப்படுகொலையை வெளிநாடுகள் சில கண்டித்தபோது "எங்கள் வேலை எங்களுக்குத் தெரியும்" என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதிலளித்தார். அத்துடன் "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற சூளுரையும் ஜெயவர்த்தனவால் விடுக்கப்பட்டது.




(தொடர்ச்சி 17 பக்கம்)

# திருக்குறளில் "புகழ்" பற்றிய சிந்தனைகள்

## இவ்வுலகில் புகழ் பெறும் உரிமை அனைவர்க்கும் உண்டு என்பது இவ்வாய்வின் முடிவாகும். அதிலும் ஈகை செய்து புகழ் பெற்று வாழ்தல் முக்கிய முடிவாகவும் பெறப்பட்டுள்ளது.



உலகெலாம் போற்றும் தமிழ் வேதமாம் திருக்குறளின் தத்துவக் கருத்துக்களில், புகழ் பற்றிய சிந்தனைகள் கொண்ட ஒரு கட்டுரை இது. நாம் எதை விரும்புகிறோமோ அதை மட்டும் தேடுவது பெரிதல்ல. நமக்கும், பிறருக்கும் தெரியாததையும் தேடி, அதை உலகோருக்கும் தருவது, நம் கடமையாகும்.

**புகழ் என்றால் என்ன?**

புகழ் என்பது ஒரு நபரின் மதிப்பு, ஒரு இடம், ஒரு பொருள், ஒரு யோசனை அல்லது ஒரு தெய்வீக ஜீவனின் மதிப்பு அல்லது நல்லொழுக்கத்தை உயர்த்தும் அடிப்படையில் உறுதிப்படுத்தும். புகழ் என்பது நல்லதைக் கொண்டாடுவது, ஒரு சாதனையை மகிமைப்படுத்துவது, எதையாவது மதிப்பையும் முக்கியத்துவத்தையும் அங்கீகரிப்பது, ஒருவரின் நற்பண்புகளை புகழ்வது. ஒரு சொல்லாட்சிக் கலை புகழ்ச்சியை ஒருவரின் அல்லது ஏதோவொன்றின் நற்பண்புகளை அல்லது குணங்களை புகழ்வதில் கவனம் செலுத்தும் ஒரு வினோதமான வகையாக அங்கீகரிக்கிறது.

ஒரு பாராட்டு, யாராவது அல்லது ஏதாவது செய்யப்படுகிறது என்று ஒரு பாராட்டு அல்லது மன்னிப்பு உள்ளது சிறப்பித்த தங்கள் பண்புகள், நடத்தைகள், நன்மைகளுக்காக, உடல் அல்லது அறிவுசார் குணங்கள், முதலிய புகழ் அதைப் பெறும் நபரின் ஆன்மாவின் மீது நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது, ஏனெனில் இது ஆளுமை மற்றும் தன்மைக்கு உண்மையிலேயே சாதகமான செல்வாக்கை உருவாக்குகிறது.

பெரும்பாலான உளவியல் வல்லுநர்கள் பாராட்டுக்களை வழங்குவதும் பெறுவதும் ஆரோக்கியமானதாக இருக்கும் என்று கருதுகின்றனர், ஏனெனில் இது சுயமரியாதையை மேம்படுத்த உதவுகிறது. பெற்றோர்கள் ஒவ்வொரு முறையும் தங்கள் குழந்தைகள் நல்ல தரங்களைப் பெறுகிறார்கள் அல்லது வேறு எந்த செயலிலும் சிறந்து விளங்குகிறார்கள், அவர்களின் வேலையையும் முயற்சியையும் பாராட்டும் பணியை மேற்கொண்டால், இந்த குழந்தைகள் அதிக நம்பிக்கையையும் உந்துதலையும் உணருவார்கள் தொடர்ந்து தங்கள் செயல்பாடுகளை திறம்பட பயன்படுத்த உதவும்.

**நூல் அறிமுகம்**

திருக்குறள். தமிழ் கூறும் நல்லுலகத்து பொன் போலப் போற்றும் பனுவல் ஒன்றுண்டு. பழைய உரைகள் பத்தின் மிகுதியோ பகுதியோ நமக்கெட்டியுள்ளன. இவற்றை இயற்றினோர், தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர் பரிமேலழகர் பருதி - திருமலையர் மல்லர் பரிப் பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற் கெல்லை யுரை கண்டாரிவர். இவற்றைத் தருமபுர ஆதினம் அச்சிட்டு அளித்திருப்பது நூலின் கல்விக்குப் பேருதவியாகும்.

தமிழ்மொழியின் ஒரு தொன்மைமிக்க அற இலக்கிய நூல் திருக்குறள். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். திருக்குறள், முப்பால், உலகப் பொதுமறை, உத்தரவேதம், தெய்வநூல், தமிழ்மறை, திருவள்ளுவப் பயன், தமிழ்மனுநூல் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நாற்சீரும், முச்சீரும் கொண்ட ஈரடி வெண்பாவால் ஆக்கப் பெற்றது குறள். அறிவுச் செல்வம் நிறைந்ததால், இதற்குத் திரு என்ற அடைமொழி கிடைத்தது. 10 குறள் வெண்பாக்கள் கொண்ட 133 அதிகாரங்கள் கொண்டன.

சங்க இலக்கிய வகைப்பாட்டில், பதினெண்கீழ்க் கணக்கு எனப்படும் நூல்களின் திரட்டில் இருக்கும் நூல், குறள் வெண்பா எனும் பாவகையால், 1330 ஈரடிச் செய்யுள்களைக் கொண்டவை. அறம், பொருள், காமம் ஆகிய மூன்று பகுப்புக்களைக் கொண்ட நூல். இது வாழ்வியல் நூலாகும். இந்நூல், பொதுத்தன்மை, மதச்சார்பின்மை எனும் பண்புகள் கொண்டது. அகிம்சையை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட நூல். தனிநபர் நல்லொழுக்கங்களாக, இன்னா செய்யாமை, புலால் உண்ணாமை, வாய்மை, கருணை அன்பு, பொறுமை, சுயகட்டுப்பாடு, நன்றியுணர்வு, கடமை, சான்றாண்மை, ஈகை, விருந்தோம்பல், இல்வாழ்க்கை நலம், கள்ளாமை, மது அருந்தாமை, ஆட்சியாளர் ஒழுக்கம், சமூகநீதி, அரண், போர், கொடியோர்க்குத் தண்டனை, கல்வி, உழவு போன்ற பல அரசியல், மற்றும் நட்பு, காதல், இல்லறம் எனும் சமூக தலைப்புக்களை உள்ளடக்கியது.

**வள்ளுவர் காலம்**

இந்நூல், கி.பி. 1ஆம் நூற்றாண்டில் உருவானது எனக் கொள்ளலாம் (வித்தியானட்நதன் - தமிழர் சால்பு) பல அறிஞர்களாலும் தலைவர்களாலும் பரவலாகப் போற்றப்பட்டு வந்துள்ளது திருக்குறள். இவர்களில் இளங்கோவடிகள், கம்பர், லியோ டால்ஸ்டாய், மகாத்மா காந்தி, ஆல்பர்ட் சுவைட்சர், இராமலிங்க அடிகள், வ.உ. சிதம்பரம்பிள்ளை, காரல் கிரவுல், ஜி.யு. போப், அலெக்சாந்தர் பியாதிகோர்சுகி மற்றும் யூ ஹ்சி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**தரவுகள்.**

திருவள்ளுவர் வரையறுத்த புகழ் பெறும் உரிமைகள் என்னும் இச் சிந்தனைகள், 12 குறள்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது.

"புகழ் கள்ளைவிடக் கொடியதாகும். கள்ளைக் குடித்தால்தான் போதை வரும். ஒருவனைப் புகழ்ந்தவுடனேயே அவன் தலைசுற்ற ஆரம்பித்துவிடும். புகழ் கொடிய சத்துருவாகும்." எனக் கூறுகிறார் சிறி சதானந்தர்.

புகழ் என்பதற்கான அர்த்தம், செல்வம், வெளிச்சம் போன்றனவாகும். இந்தப் புகழ் மனித வாழ்வுக்கு பெரிதும் உறுதுணையாக இருப்பதை நாம் அறியலாம். புகழை விரும்பாத மனிதர் இல்லை எனவே கூறலாம். இனி புகழ் பற்றிய சில திருக்குறள்களை ஆராய்வோம்.

1. அறம் செய்து புகழ் பெறுவது
அறத்தான் வருவதே இன்பம் (குறள் 39)

அறம் செய்து வாழும் மனிதன், மனதில் மனித நேயம் மிக்கவனாக இருப்பதனால், அவன் உண்மையாக அறத்தின் வழி வாழ முற்படுகின்றான். எனவே புகழ் பெறும் உரிமை வாழ்வை வாழ்கின்றான். புகழ் இல்லா வாழ்க்கை வாழ்பவனால், நிச்சயம் அறம் செய்ய முடியாது என்பதை விளக்குகிறார் திருவள்ளுவர்.

2. புகழ் பெறுதலால் வரும் பீடு நடை
புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை (குறள் 59)

புகழுடன் வாழும் குடும்பம் கொண்ட ஒருவனுக்கு பெருமை சேர்க்காத மனைவி கிடைக்காத குடும்பத்தில் அவனை இகழ்வார் முன், அந்தக் கணவனால், காளைபோல் பெருமிதமாக நடக்கும் துணிவு இல்லாமல் போய் விடும் எனக் காட்டுகின்றார் திருவள்ளுவர்.

3. ஈகையால் புகழ் பெறுவது
உரைப்பவர் உரைப்பவை எல்லாம் (குறள் 232)

இரப்பவர்க்கும் வறுமையில் வாழ்பவர்க்கும் இல்லை என்று சொல்லாது, முடிந்தவரை தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வாழ்வது, உயர்ந்தவர்களால், போற்றப்படும் உரிமையைப் பெறவும் புகழ்பெறவும் உதவும். கடையேழு வள்ளல்களும் ஈகையிற் சிறந்து விளங்கிப் புகழ் பெற்றவர்களே. அது போலவே புறாவுக்காகத் தன் சதையையே கொடை தந்து புகழ் பெற்றான் மன்னன் சிபிச் சக்கரவர்த்தி.

4. இனநலத்தால் புகழ் பெறுவது
மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (குறள் 457)

ஒருவனின் மனநலம் நன்றாக இருக்கும் போது, அவனைச் சார்ந்த மக்களுக்கும் சமுதாயத்திற்கும் அது வளர்ச்சியைத் தரும். அவன் சேர்ந்த இனம் நன்றாகச் செய்ற்பட, எல்லாவகையான புகழும் கிட்டும். மனநலம் ஒருவனின் நெஞ்சத்தைச் சான்றாண்மைப் பண்புடன் வைத்திருக்கும். ஒருவன் தன் இனநலனுக்காக தன்னை வருத்தி வாழும் ஒருவன், அவர்களுக்கு ஈகை கொடுத்து, காப்பாற்றினால், அந்த மக்களின் இனநலமும் காக்கப்படும்.

5. அழியாத புகழ் பெறுவது.
ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் (குறள் 233)

நிலையில்லா இவ்வுலகத்தில் உயர்ந்து புகழ்பெற்று நிலைத்து வாழ்வதைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. உயர்ந்த புகழ் என்பதால், எமக்கு வரும் துன்பங்களால், எம்மை வருமுன்னரே காப்பதாகும். அதிலும், நாம் குற்றம் செய்யாது, நல்லவராக இருந்து மற்றவர்க்கு வழிகாட்டுவது. விருந்தோம்பிப் பிறரைப் பாதுகாப்பது, ஒருவரைப் பார்த்த அளவில், அவரின் துயரை அறிந்து அவருக்கு உதவுவது. இப்படிச் சில அரிய செயல்களால் உலகத்தில் புகழை அடையலாம்.

6. விரும்பும் துறையில் தகுதிப்பாட்டுடன் தோன்றிப் புகழ் பெறல்.
தோன்றிற் புகழொடு தோன்றுக (குறள் 236)

ஒரு செயலைச் செய்து அதனை வெற்றி கொள்ளும் போது, பேரும் புகழும் நம்மைத் தேடி வரும். இப்படிப் புகழ் பெற்று, வாழ்வில் வெற்றி கொண்டோரை நாம் இன்னும் போற்றுகிறோம். புகழ்கின்றோம். கரும வீரர் காமராஜர் அதிகம் படிக்காத போதும், கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய பல அரிய செயல்களைச் செய்து, கல்வித் திட்டத்தை மேம்படுத்தினார். நாட்டில் பல நல்ல திட்டங்களைச் செய்றபடுத்தி, நல்ல அரசியல் தலைவராக விளங்கினார். அதனாலேயே இன்றும் அவர் புகழுடம்புடன் இவ்வுலகில் வாழ்கின்றார்.

7. புகழ் பெற வாழ்வது
புகழ்பட வாழாதார் தந்நோவார் (குறள் 237)

ஒருவர் எப்படிப் புகழைச் சேர்ப்பது என அறியாது, புகழ் பெறும் பிறரைப் பார்த்ததும், அப்படியான புகழ் தம்மகுக் கிட்டவில்லை என மனம் நொந்து கொள்வதுண்டு. மேலும் தாம் புகழ் பெறாமல், தம்மை இகழ்வாரை நோவது ஏன் என கேள்வியை எழுப்புகிறார் திருவள்ளுவர்.

8. புகழ்ந்தவை போற்றிச் செய்து புகழ் பெறல்
புகழ்ந்தவை போற்றில் செயல்வேண்டும் (குறள் 538)

குற்றமில்லாத ஒருவர் பெரியவர் போற்றும் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாதவிடத்து, எக்காலத்திலும் அவருக்குப் புகழ் வந்து சேராது. ஒழுக்கத்தில் உயர்ந்தவராய், நடுநிலைமை கொண்டவராய், இருத்தல் வேண்டும். இகழ்ந்தவர் எனப்படுபவர், குற்றத்தைத் தொழிலாகக் கொண்டு, பிறரைத் துன்புறுத்தி வாழ்பவர். மதுவுக்கு, மாதுவுக்கு அடிமையானவர்கள். உலகத்தில் வாழும் மக்கள் அனைவரும் புகழ் பெற வேண்டும் என எண்ணுகிறார் திருவள்ளுவர், உலக மக்கள் அமைதியாக வாழவும் புகழ் பெறும் உரிமை கொண்டவர்களாகவும் முடியும் என விளக்குகிறார்.

*(தொடர்ச்சி 17 பக்கம்)*

(16 பக்கம் தொடர்ச்சி)

# திருக்குறளில் "புகழ்" பற்றிய சிந்தனைகள்

9. ஒவ்வொருவர்க்கும் உரிய புகழ்
வசையிலா வண்பயன் குன்றும் (குறள் 239)

புகழ் பெறாத ஒருவனின் உடலைச் சுமந்த நிலமும் தன் குறைவற்ற பயன்பாட்டில் தகுதி குன்றிப் போகும் எனவும், புகழ் சேர்க்காத ஒருவனை இந்நிலம் சுமக்கிறதெ எனவும் வருந்தியபடி கூறும் திருவள்ளுவர், மண் சுமக்க வேண்டும் என்றால் நிச்சயம் ஒருவன் புகழ் பெறும் உரிமையுடன் வாழ வேண்டும் எனக் கூறுகிறார்.

10. புகழ் பெற்று வாழும் வாழ்க்கை வாழல்
வசையொழிய வாழ்வாரே வாழ்வார் (குறள் 240)

பழியில்லாது வாழ்பவர்க்கு நிலைத்த வாழ்வு நிலைக்கும். ஆனால், புகழ் இல்லாது வாழ்பவர்க்கு, நிலைத்த வாழ்வு இல்லை எனக் கூறுகிறார் திருவள்ளுவர். நிலைத்த வாழ்வு அடைய, பிறர் நம்மைப் புகழ்ந்து பேசும் அளவுக்கு ஒவ்வொருவரும் உரிமை பெற்று வாழல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் துணிவு ஆகும்.

11. தலைவி தலைவனைப் புகழல்
நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு (குறள் 1199)

தாம் விரும்பியவர் தம்மிடம் அன்புடையவராக இல்லை எனினும் அவரது புகழைக் கேட்பது காதுக்கு இன்பம் எனக் காண்கிறாள் காமத்துப்பால் தலைவி. வேண்டியவர், வேண்டாதவர், நல்லவர் தீயவர் என மாறுபாடு இல்லாது, அவர் புகழ் பற்றி அறிந்து, உள்ளம் உவமை கொண்டு வாழத் துணியும் தலைவியைப் படைத்துள்ளார் திருவள்ளுவர்.

12. உயிர்க்கு ஊதியம் ஆகும் ஈகை செய்து புகழ் பெறல்
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது (குறள் 231)

ஒருவன் இப்புவியில் பிறந்த பயனை அடைய வேண்டின், ஏழைகளுக்கு உதவல் வேண்டும். அதனால், புகழ் பெற்று வாழல் வேண்டும். இதை விடப் பிறப்பின் பெரும் பேறு வேறு இல்லை எனவே பிறர்க்கு உதவி வாழாதார், இந்தப் புவியில் பாரமாக இருப்பர் எனக் கூறுகிறார் திருவள்ளுவர்.

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும் ( குறள். 238)

தமக்குப் பிறகும் எஞ்சி நிற்கக் கூடிய புகழைப் பெறாவிட்டால், அது அந்த வாழ்க்கைக்கே வந்த பழியென்று வையம் கூறும். எனவே புகழ் பெற்று வாழ்வது மிகவும் அவசியம் என்பதை அறிவோம்.

புகழின் அதிகப்படியான மற்றும் அதன் பற்றாக்குறை இரண்டும் தனிநபருக்கு எதிர்மறையானதாக இருக்கும் என்பதைக் குறிப்பிடுவது முக்கியம். யாரோ பெறும்போது பாராட்டுக்கு மேலும் பாராட்டும் கிட்டும். தற்பெருமை மற்றும் தங்களை மற்றவர்கள் மேன்மையாக நம்புவர். எந்தப் புகழையும் பெறாவிட்டால், நீங்கள் செய்யும் செயலுக்கு எந்த தகுதியும் இல்லை, உங்கள் சுயமரியாதை வீழ்ச்சியடையும் என்று நீங்கள் உணருவீர்கள். புகழ் பெறவேண்டியவர், ஆரோக்கியமான சமநிலையை பராமரிக்க வேண்டும்.

இதனையே "புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழி எனின், உலகுடன் பெறினும், கொள்ளலர்" எனக் கூறுகிறது புறநானூறுப் பாடல். (புறநானூறு 182)

### திருக்குறள் ஒரு உலக நூல் எனக் கூறுலாம்

இக்கட்டுரை, தனி மனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, உலக நாடுகள் எனும் பாகுபாட்டை விளக்கிக் கூற முற்பட்டுள்ளதால், இது உலகப் பொதுமறை எனச் கூறக்கூடியதாக உள்ளது. மேலும், சாதி, இனம், மதம், மொழி, அரசியல், நாடுகள் போன்ற செயற்கைக் காரணிகளைக் கடந்து, உலகம் முழுமைக்கும் பொதுவாகி நிற்கின்றது.

நிறம், உருவம், ஆண், பெண், மூன்றாம் பாலினத்தவர், மாற்றுத் திறனாளிகள், இளையவர், முதியவர் எனும் இயற்கை எல்லைகளைக் கடந்து, உலகில் வாழும் எல்லார்க்கும் பொருந்தும் தகுதிப்பாட்டைக் கொண்டு உயர்ந்து நிற்கின்றது. எனவே இக்கட்டுரை உயர்ந்த சிந்தனையைச் சுட்டிக் காட்டுவதால், "திருக்குறள் உலக நூல்" என்பதை நிறுவி நிற்கின்றது.

### ஆய்வின் முடிவாக

இவ்வுலகில் புகழ் பெறும் உரிமை அனைவர்க்கும் உண்டு என்பது இவ்வாய்வின் முடிவாகும். அதிலும் ஈகை செய்து புகழ் பெற்று வாழ்தல் முக்கிய முடிவாகவும் பெறப்பட்டுள்ளது.

### முடிவுரை

இவ்வுலகில் பிறந்த அனைவரும் நேர்மையாக உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும். அப்பொருளைத் தகுதி வாய்ந்த ஏழை மக்களுக்கு கொடுத்து, அவரையும் பிறர்க்குக் கொடுத்து வாழத் தூண்ட வேண்டும். இதுவே சமுதாய நோக்கு, பொருள் நோக்கு, சமநோக்கு என உணர்ந்து இதன் மூலம் புகழ் பெற்று வாழல் வேண்டும் என்பது முடிவான கருத்தாகும்.

*- Dr. புட்பா கிறிட்டி, pushpachristy@gmail.com*
*துணை நின்ற நூல் திருக்குறள். டாக்டர். மு. வரதராசன்.*

(15 பக்கம் தொடர்ச்சி)

# சிங்களத்தின் வெறியாட்டமும் தமிழினத்தின் ஆறாத வடுக்களும்!

*நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, வன்முறைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரும் படையினரும் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை, அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நேர்காணல் ஒன்றின்போது வினவியது. படையினரிடம் பெரிய அளவில் தமிழர்களுக்கு எதிரான உணர்வு ஏற்பட்டிருந்தது என நான் நினைக்கிறேன். கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால், அது சிங்களவர்களுக்கு எதிரான நடவடிக்கையாகப் போய்விடும் என்று படையினர் உணர்ந்திருந்தார்கள். உண்மையிலேயே சில இடங்களில் அவர்கள் கலகக்காரரர் களை ஊக்குவித்திருந்ததை நாங்கள் கண்டோம்" என ஜெயவர்த்தன பதிலளித்திருந்தார்.*

*1983 ஜூலை 23 முதல் ஜூலை 30 ஆம் திகதி வரை தமிழர்களுக்கு நடந்த கொடூரங்களை இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகின்றது "கறுப்பு ஜூலைக் கலவரம்" எனப்படும் தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாக, தீராத வலியாக இன்றும் கனன்று கொண்டிருக்கின்றது. இந்த ஜூலைக் கலவரம் நடந்தேறி 43 வருடங்கள் கடந்துவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் வரும்போதும் ஜூலை என்றதுமே தமிழர் மனங்கள் வேதனையால் வெம்பி வெடிக்கின்றன.*

*இந்த 1983 ஜூலைக்கலவரம் என்ற பெயரில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலையே பல வரலாறுகளை எழுதியது. பல வரலாறுகளை மாற்றியது. தமிழர்கள், பெரும்பான்மையினமான சிங்களவர்கள் மேல் - சிங்கள ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கையிழக்க காரணமாக அமைந்தது. இந்த நாட்டிலே சிங்களவர் - தமிழர்கள் ஒன்றாக இணைந்து வாழ முடியாது என்ற நிலைமையை ஜூலைக் கலவரமே ஏற்படுத்தியது. காலச்சக்கரம் 43 ஆண்டுகளைக் கடந்து ஓடிவிட்டாலும், 1983 ஜூலையில் கொழும்பு வீதிகளில் ஓடிய தமிழர்களின் இரத்தம் இன்னும் காயாமல் அப்படியேதான் இருக்கின்றது. அன்று கொழும்பில் பற்றி எரிந்த தீயின் புகை, இன்றும் இலங்கையின் ஆட்சி பீடத்தின் மீதும், அரசியல் நகர்வுகளின் மீதும் படிந்தே காணப்படுகிறது. ஆட்சியாளர்கள் மாறினாலும் தமிழர்கள் மீதான அவர்களின் அணுகுமுறையும், தமிழர்களுக்கு அவர்கள் மீதிருக்கும் அவநம்பிக்கையும் மாறாமல் தொடர்வதற்குக் காரணம், அன்று விதைக்கப்பட்ட இனவாத நச்சு விதைதான்.*

*சமத்துவமும், நீதியும், கடந்த காலத் தவறுகளுக்கான உண்மையான பிராயச்சித்தமும் இல்லாதவரை, இரு தேசிய இனங்களுக்கு இடையே உண்மையான நல்லிணக்கம் என்பது வெறும் காகிதக் கனவாகவே இருக்கும்.துப்பாக்கிக் குண்டுகளை விடவும், திட்டமிட்ட ஒடுக்குமுறைகளும், சக மனிதனின் மீதான நம்பிக்கையிழப்புமே ஒரு தேசத்தை நிரந்தரமாகப் பிளவுபடுத்துகின்றன. அந்தப் பிளவின் நிழலில்தான் இலங்கைத் தீவின் இன்றைய ஆட்சியும், அதன் எதிர்காலமும் நகர்ந்து கொண்டிருக்கின்றன.*



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் முகநூல் மோசடி கும்பலின் "கைவரிசை"

## பெண் ஒருவரிடமிருந்து 8 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாவை வங்கிக் கணக்கிற்கு பெற்று ஏமாற்றியது

மட்டக்களப்பில் வசிக்கும் பெண் ஒருவரோடு முகநூலில் 3 நாட்களில் நட்புக் கொண்டாடிய வெளிநாட்டு வைத்தியர் என போலியான வைத்தியர் அதிர்ச்சி வைத்தியம் செய்வதாக அனுப்பிய பல இலச்சம் ரூபா பெறுமதியான விலை உயர்ந்த பொருட்களை விமான நிலையத்தில் இருந்து வீட்டுக்கு கொண்டு வந்து தருவதற்கு பல இலச்சம் ரூபா பணம் கோரிய இணைய மோசடி கும்பலிடம் 8 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாவை பெண் ஒருவர் இழந்துள்ளதாக மட்டக்களப்புத் ததலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது, குறித்த மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் வாழும் பெண் ஒருவரின் முதநூலில் லண்டனில் உள்ள வெள்ளைக்காரரான டான் என்ற வைத்தியர் கடந்த 13ம் திகதி இணைந்து கொண்டு நண்பர்களாகி இருவரும் சில நாட்கள் முகநூல் ஊடாக கருத்து பரிமாற்றம் செய்து வந்துள்ளனர்.

இதனை தொடர்ந்து குறித்த மட்டக்களப்பில் வசிக்கும் பெண்ணின் கையடக்க தொலைபேசிக்கு கடந்த 16ம் திகதி இலங்கை கட்டுநாயக்கா விமான நிலைய பகுதியில் இயங்கிவரும் வெளிநாடுகளில் இருந்து வரும் பொதிகளை விநியோகிக்கும் கம்பனியின் பணியாளர் என தன்னை அடையாளம் காட்டிய நபர் ஒருவர், லண்டனில் இருந்து வைத்தியர் டான் என்பவர் உங்களுக்கு ஒரு பொதியை அனுப்பியுள்ளார் அதில் பல இலச்சம் ரூபா பெறுமதியான விலை உயர்ந்த பொருட்கள் உள்ளன. அதனை சுங்க திணைக்களத்தில் இருந்து விடுவித்து மட்டக்களப்பிற்கு அனுப்புவதற்கு 87 ஆயிரம் ரூபா பணத்தை உடனே வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கோரினார்.

இதனை நம்பி 1 மேற்படி பெண் 17ம் திகதி உடனடியாக 87 ஆயிரம் ரூபா அனுப்பிய பின்னர் மேலும் 3 லட்சம் தேவை என்றதும் 3 லட்சம் ரூபா அனுப்பிய பின்னர் அந்த பொதியை கிளியர் செய்ய மேலும் பணம் கோரியதை அடுத்து அந்த பெண்ணின் தாயார் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அதே வங்கி கணக்கில் வைப்பில் இட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து மேலும் ஒரு இலச்சம் ரூபாவை மோசடி கும்பல் கணக்கில் வைப்பில் இட்டபின்னர் அந்த மோசடி கும்பல் மேலும் ஒரு இலச்சத்து 50 ஆயிரம் ரூபாவை கொடுத்தால் பாசல் கிளியராகும் என்றும் அதனை அனுப்புமாறும் வற்புறுத்தியதாகவும் இதனையடுத்து குறித்த பெண் சுதாரித்து கொண்டு மோசடி கும்பலிடம் பணம் தர முடியாது என்ற பின்னர் மீண்டும் அவர்களிற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய போது அது துண்டிக்கப்பட்டுள்ளது என பணத்தை மோசடி கும்பலிடம் இழந்த பெண் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இவ்வாறான மோசடிச் செயற்பாடுகள் பல இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# நாடாளுமன்றில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட கறுப்பு ஜூலையின் 43 ஆவது ஆண்டு நினைவு தினம்




1983 ஜூலை 23 கறுப்பு ஜூலை இனக்கலவரத்தின் 43 ஆவது வருட நினைவு தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் 23ம் திகதி வியாழக்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஸ்ரீநாத் உரையாற்றும்போது, ”இன்றைய நாள் கனத்த இதயத்துடன் பேச வேண்டிய நாள். 1983 ஜூலை 23 தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய கொடுமை இழைக்கப்பட்ட நாள். கடந்த கால வரலாறுகள் நம்பிக்கையீனங்களையும் விரக்திகளையும் தமிழ் மக்கள் மனங்களில் விதைத்துள்ளன. பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாகத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வாகவே 1983 ஜூலை 23 இனப்படுகொலை உள்ளது. இது 2009 முள்ளிவாய்க்கால் வரை நீட்சிபெற்றிருந்தது.


இந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டி நிற்கும் தமிழ்ச சமூகத்துக்கு இந்த நாட்டில் வழங்கப்பட்ட நீதி என்ன? இதற்கு நீதி வழங்கப்பட்டதாகச் சரித்திரமும் இல்லை, வழங்கப்படுவதற்கான அறிகுறிகளும் இல்லை. இன்று செம்மணியில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கான சர்வதேச உதவியைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட அனுமதி மறுக்கப்படும் நிலைதான் உள்ளது என்றார்.

# குட்டிமணி, தங்கத்துரை சிலை திறப்பு விழா: ஏற்பாட்டாளர் கந்தசாமி சதீஸ் திங்கட்கிழமை கைது!

## பின்னர் பிணை வழங்கியது நீதிமன்றம்.



தங்கத்துரை



குட்டிமணி

- ந.லோகதயாளன்

வெலிக்கடை சிறைக்கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முன்னாள் தலைவர் தங்கத்துரை மற்றும் முன்னாள் செயலதிபர் குட்டிமணி ஆகியோரின் உருவச்சிலை திறப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்த கந்தசாமி சதீஸ், 20ம் திகதி திங்கட்கிழமை வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையில் எதிர்வரும் 25 ஆம் திகதி மேற்படி உருவச்சிலைகளைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வந்தன. இதன்போது, ஏற்பாட்டுக் குழுவில் ஒருவரான வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் உப தவிசாளர் கந்தசாமி சதீஸ், பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். தொடர்ந்து, விடுதலைப்புலிகளை மீளுருவாக்கம் செய்ய முற்பட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர் அவர், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது அவரை நீதிவான் பிணையில் விடுவித்து புதன்கிழமை வரை வழக்கை ஒத்திவைத்தார். அதேவேளை, உருவச்சிலை திறப்பு விழா ஏற்பாடுகளுக்கும் நீதிவான் தடை விதித்தார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை வன்முறையின் போது, வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தங்கத்துரை மற்றும் குட்டிமணி உள்ளிட்ட 53 தமிழ் அரசியல் கைதிகள் சிறை அதிகாரிகள் மற்றும் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டமை இலங்கை வரலாற்றில் ஒரு கறுப்புப் பக்கமாகும். இந்த வரலாற்று நிகழ்வை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படும் சிலை திறப்பு விழா ஏற்பாடுகளால் தற்போது பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# ஜனாதிபதி அநுரவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கேற்ப மாகாணத்தின் காணறு இயற்கைச்சூழல் ஆகியவற்றை பாதுகாக்க "கிழக்கு மாகாணக் காணிகளைப்பாதுகாத்தல்" எனும் குழு நியமனம்!

- ந.லோகதயாளன்

கிழக்கு மாகாணத்தில் அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோதக்காணி ஆக்கிரமிப்புகள், முறையற்ற காணி நிரப்புதல்கள் மற்றும் கடலோர கட்டுமானங்களைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய, மாகாணத்தின் காணிகளையும் இயற்கைச்சூழலையும் பாதுகாப்பதற்காக “கிழக்கு மாகாணக் காணிகளைப்பாதுகாத்தல்” எனும் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், விசேட பொலிஸ் அலகொன்றையும் நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட யோசனைக்கே அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

தென்மாகாண முன்னாள் காணி ஆணையாளரும் தற்போதைய தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான சேனக பல்லியகுருகே தலைமையில் இவ்விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் சமூக அமைப்பைக் கருத்திற்கொண்டும் அனைத்துச்சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் வகையிலும் இக்குழுவில் இரண்டு தமிழ்ப்பிரதிநிதிகளும் இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகளும் மற்றும் தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமிக்கப்பட்ட குழுவில்

குழுத்தலைவராக சேனக பல்லியகுருகே, * உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாணம்) - உள்ளூராட்சித் திணைக்களம் (தென் மாகாணம்), பி.பி.கஸ்தூரியாரச்சி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் (அம்பாறை) - அம்பாறை பிரிவு, திருமதி. வளர்மதி ரவீந்திரன் மாகாண காணி ஆணையாளர் - மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் (கிழக்கு மாகாணம்), ஏ.டி.எம். ரஃபீ மாநகரசபை ஆணையாளர் - கல்முனை மாநகரசபை, வசந்த லியனகே பிரதி வனப்பாதுகாவலர் (வடக்கு-கிழக்கு மாகாணம்)- வனப்பாதுகாப்பு திணைக்களம், செல்வி. ஹெஷானி சோமரத்ன உதவிப் பணிப்பாளர் - வனஜீவிகள் பாதுகாப்புத் திணைக்களம், திருமதி. பஞ்சாலி பெர்னாண்டோ சட்ட அதிகாரி - கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடலோர வள மேலாண்மை திணைக்களம், அனுஷன் முனசிங்க பிராந்திய உதவிப் பணிப்பாளர் (அம்பாறை-மட்டக்களப்பு) தொல்பொருள் திணைக்களம், ஐ.எம். உபயகல்யாண வதிவிட நிறுவன மேலாளர் (முறைமை - சி, தெஹியத்தகண்டிய) - இலங்கை மகாவலி அதிகாரசபை, திரு. எஸ். பரமேஸ்வரன் பிராந்திய உதவிப் பணிப்பாளர் (அம்பாறை) - காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் ஜி.ஆர்.எல். பெரேரா சிரேஷ்ட அளவை அத்தியாட்சகர் (அம்பாறை) - அளவைத் திணைக்களம், எம்.எச்.எம். மஹீர் கனிஷ்ட முகாமையாளர் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (பாசிக்குடா) ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில், மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை இந்து மா மன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த ஆடிப்பிறப்பு கொண்டாட்ட நிகழ்வு 17ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் இடம் பெற்றது.

"ஆடிபிறப்பில் தமிழர் நாம் கூடி குதூகலித்து கொண்டாடுவோம்" எனும் தொனிப் பொருளில் பாடசாலையின் பிரதி அதிபர் தலைமையில் ஆடிப்பிறப்பு கொண்டாட்ட நிகழ்வுகள் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டதோடு, மன்னார் வலயக் கல்வி திணைக்களத்தின் பிரதி கல்வி பணிப்பாளர், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது நவாலியூர் சோமசுந்தர புலவரின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அரசாங்க அதிபர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனை தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சூர்யா நடித்த "விஸ்வநாத் அன்ட் சன்ஸ்" படம் ஆகஸ்ட் 14-ந்தேதி வெளியாகிறது

சினிமா



சூர்யா நடித்த விஸ்வநாத் அன்ட் சன்ஸ் திரைப்படம் ஆகஸ்ட் 14-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் சூர்யா நடித்த "கருப்பு" திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து, "வாத்தி", "லக்கி பாஸ்கர்" உள்ளிட்ட வெற்றிப் படங்களை இயக்கிய வெங்கி அட்லூரி இயக்கத்தில் உருவாகியுள்ள "விஸ்வநாத் அன்ட் சன்ஸ்" திரைப்படத்தில் சூர்யா நடித்துள்ளார். சூர்யாவின் 46-வது திரைப்படமாக உருவாகியுள்ள இந்த படத்தை நாக வம்சி தயாரித்துள்ளார். இதில் மமிதா பைஜு கதாநாயகியாக நடித்துள்ளார். ராதிகா சரத்குமார், ரவீனா டாண்டன், பவானி ஸ்ரீ உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்துள்ளார். நவின் நூலி படத்தொகுப்பு செய்துள்ளார்.

சமீபத்தில் இந்த படத்தின் முதல் பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், "விஸ்வநாத் அன்ட் சன்ஸ்" படத்தின் 2-வது பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி இந்த பாடல் வருகிற 25-ந்தேதி வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. "விஸ்வநாத் அன்ட் சன்ஸ்" திரைப்படம் வருகிற ஆகஸ்ட் 14-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

# அனிருத் குரலில் "ஹாய்" படத்தின் "ரசகுல்லா" பாடல் வெளியானது

நடிகர் கவின் மற்றும் "லேடி சூப்பர்ஸ்டார்" நயன்தாரா முதன்முறையாக இணைந்து நடிக்கும் "ஹாய்" திரைப்படத்தின் இரண்டாவது பாடலான "ரசகுல்லா" வெளியாகி இணையதளங்களில் வைரலாகி வருகிறது. இசையமைப்பாளர் ஜென் மார்டின் இசையமைப்பில் உருவாகியுள்ள இப்பாடலை, தமிழ் திரையுலகின் ராக்ஸ்டார் அனிருத் ரவிச்சந்தர் தனது துள்ளலான குரலில் பாடியுள்ளார்.

விக்னேஷ் சிவனின் "ரௌடி பிக்சர்ஸ்" மற்றும் "7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ்" நிறுவனங்கள் தயாரிப்பில், லோகேஷ் கனகராஜின் உதவி இயக்குநரான விஷ்ணு எடவன் இத்திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.



கவின், நயன்தாராவுடன் இணைந்து பாக்யராஜ், ராதிகா சரத்குமார், பிரபு மற்றும் விடிவி கணேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

காதல் மற்றும் துள்ளல் இசையுடன் கூடிய இந்த "ரசகுல்லா" பாடல் தற்போது முதலிடத்தைப் பிடித்து வருகிறது. இத்திரைப்படம் வரும் ஆகஸ்ட் 14 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.



# THE ROLE OF RELGION IN HUMAN LIFE: A BRIEF PHILODOPHICAL DIALOGUE

BY: K. ANANTHANATHAN, MA, MSW, RSW REGISTED SOCIAL WORKER WITH OCSWSSW

**"People will forget what you said; People will forget what you did, but people will never forget how you made them feel" - Dalai Lama**

**DEFINIOTION OF RELIGION:**

Religion is a collection of belief systems, such as cultural/ traditional systems and world views/ experiences that relate humanity to spirituality and sometimes, to moral values. The word religion is sometimes used interchangeably with faith or belief system. Many religions have narratives, symbols, traditions, and sacred histories that are intended to give meaning to life or to explain the origin of life or the universe. They tend to derive morality, ethics, religious laws or a preferred lifestyle from their ideas the cosmos and human nature. Kenneth Schouler, in his book "The everything World's Religions Book: Explore the Beliefs, Traditions, and Cultures of Ancient and Modern Religions", estimates there are roughly 4, 200 religions in the world.

The development of religion has taken different forms in different cultures. Some religions focus on the subjective experience of the religious individual while others consider the activities of the religious community to be most important. Some religions claim to be universal, believing their laws and cosmology to be binding for everyone while others are intended to be practiced only by a closely defined or localized group. Also, the word religion is sometimes used interchangeably with faith or belief systems.

In light of the above brief definition/explanation of religion, I will discuss two deeply thinking minds through their philosophical dialogue how to educate people on the role of religion/religious faith in human life. First, philosophical dialogue was occurred between Dalai Lama and Priest Leonardo Boff (a Brazilian Theologist) in a religious round table discussion about world religion and freedom. Second, philosophical dialogue occurred between two unknown passengers (An American young girl and An Indian business person) in Aero - plane. By discussion of these brief philosophical dialogue of essence of religion, I hope the Uthayan readers will broaden their opinion towards practical aspects of the religion on whether religion is the opium of masses or what is the true purpose of religion/ religious faith? I hope the Uthayan readers can see themselves in these philosophical dialogues and learn that through philosophical dialogue we can touch on a wide range of important religious issues/aspects that all religious faith/religions can understand each other.

**A BRIEF PHILOSOPHICAL DIALOGUE BETWEEN A BRAZILLIAN THEOLOGIST LEONARDO BOFF AND DALAILAMA**

"Your holiness, what is the best religion?" I thought he would say: "The Tibetan Buddhism" or "The oriental religions much older than Christianity"

Dalai Lama paused, smiled and looked me in the eye. ….

He answered:

"The best religion is the one that gets you closest to God/Truth. It is the one that makes you a better person:

To get out of my embarrassment with such a wise answer, I asked: "What is it that makes me better?"

He responded:

"Whatever makes you more compassionate, More sensible, More detached, More loving, More humanitarian, More responsible, More ethical."

"The religion that will do that for you is the best religion"

I (Leonardo Boff) was silent for a moment, marveling and even today thinking of his wise and irrefutable responses:

"I am not interested, my friend, about your religion or if you are religious or not."

What really is important to me is your behaviour in front of your peers, family, workers, colleagues, community, and in front of the world."

"Remember, the universe is the echo of our actions and our thoughts."

"The law of action and reaction is not exclusively for physics. It is also of human relations. If I act with goodness, I will receive goodness. If I act with evil, I will get evil."

"What our grandparents told us is the pure truth.
You will always have what you desire for others.
Being happy is not a matter of destiny. It is a matter of options."

Finally, he said:

"Take care of your thoughts because they become words.
Take care of your words because they will become actions.
Take care of your actions because they will become Habits.
Take care of your Habits because they will form your character.
Take care of your character it will form your Destiny, and your Destiny will be your Life .... … There is no religion higher than the Truth."

The second dialogue will be

EXAMPLE 2: **WHY I AM A HINDU?**

I was flying from JFK New York Airport to SFO San Francisco Airport, California to attend a meeting at Monterey, California. An American girl was sitting on the right side, near window seat. It indeed was a long journey-it would take seven hours. I was surprised to see the young girl reading a Bible unusual of young Americans. After some time she smiled and we had few acquaintances talk. I told her that I am from India.

Then suddenly the girl asked: 'What's your faith?' 'What?' I didn't understand the question.

'I mean, what's your religion? Are you a Christian? Or a Muslim?

'No!' I replied, 'I am neither Christian nor Muslim'. Apparently, she appeared shocked to listen to that. 'Then who are you?' 'I am a Hindu', I said.

She looked at me as if she was seeing a caged animal. She could not understand what I was talking about.

A common man in Europe or US knows about Christianity and Islam, as they are the leading religions of the world today. But a Hindu, what?

I explained to her-I am born to a Hindu father and Hindu mother. Therefore, I am a Hindu by birth.

'Who is your prophet?' she asked.
'We don't have a prophet,' I replied.

'What's your Holy Book?'
We don't have a single Holy Book, but we have hundreds and thousands of philosophical and sacred scriptures,' I replied.

'Oh, come on at least tell me who is your God?'
'What do you mean by that?'
'Like we have Jesus and Muslims have Allah-don't you have a God?"

I thought for a moment. Muslims and Christians believe one God (Male God) who created the world and takes an interest in the humans who inhabit it. Her mind is conditioned with that kind of belief.

According to her (or anybody who doesn't know about Hinduism), a religion needs to have one Prophet, one Holy book and one God. The mind is so conditioned and rigidly narrowed down to such a notion that anything else is not acceptable. I understood her perception and concept about faith. You can't compare Hinduism with any of the present leading religions where you have to believe in one concept of god.

I tried to explain to her: 'You can believe in one god and he can be Hindu. You may believe in multiple deities and still you can be a Hindu. An atheist can also be a Hindu. What is more – you may not believe in god at all, still you can be a Hindu. An atheist can also be Hindu.

This sounded very crazy to her. She couldn't imagine a religion so unorganized, still surviving for thousands of years, even after onslaught from foreign forces.

'I don't understand but it seems very interesting. Are you religious?' What can I tell to this American girl?

I said: 'I do not go to temple regularly. I do not make any regular rituals. I have learned some of the rituals in my younger days. I still enjoy doing it sometimes.'

'Enjoy? Are you not afraid of God?'

'God is a friend. No-I am not afraid of God. Nobody has made any compulsions on me to perform these rituals regularly.'

She thought for a while and then asked: 'Have you ever thought of converting to any other religion?'

'Why should I? Even if I challenge some of the rituals and faith in Hinduism, nobody can convert me from Hinduism. Because, being a Hindu allows me to think independently and objectively, without conditioning. I remain as a Hindu never by force, but choice.' I told her that Hinduism is not a religion, but a set of beliefs and practices. It is not a religion like Christianity or Islam because it is not founded by any one person or does not have an organized controlling body like the Church or the Order, I added. There is no institution or authority.

'So, you don't believe in God?' she wanted everything in black and white.

'I didn't say that. I do not discard the divine reality. Our scripture, or Sruthis or Smrithis -Vedas and Upanishads or the Gita-say God might be there or he might not be there. But we pray to that supreme abstract authority (Para Brahma) that is the creator of this universe.'

'Why can't you believe in one personal God?'

'We have a concept-abstract-not a personal god. The concept or notion of a personal God, hiding behind the clouds of secrecy, telling us irrational stories through few men whom he sends as messengers, demanding us to worship him or punish us, does not make sense. I don't think that God is as silly as an autocratic emperor who wants others to respect him or fear him.' I told her that such notions are just fancies of less educated human imagination and fallacies, adding that generally ethnic religious practitioners in Hinduism believe in personal gods. The entry level Hinduism has over-whelming superstitions too. The philosophical side of Hinduism negates all superstitions.

'Good that you agree God might exist. You told that you pray. What is your prayer then?'

'Loka Samastha Sukina Bhavantu. Om Shanti, Shanti, Shanti,'

'Funny,' she laughed, 'what does it mean?' (continued on page 21)

***(continued from page 20)***

'May all the beings in all the worlds be happy. Let there be Peace, Peace, and Peace every where.'

'Hmmm... very interesting. I want to learn more about this religion. It is so democratic, broad-minded and free' she exclaimed.

'The fact is Hinduism is a religion of the individual, for the individual and by the individual with its roots in the Vedas and the Bhagavad-Gita. It is all about an individual approaching a personal God in an individual way according to his temperament and inner evolution-it is as simple as that.'

'How does anybody convert to Hinduism?'

'Nobody can convert you to Hinduism, because it is not a religion, but it is a Culture, a way of living life, a set of beliefs and practices. Everything is acceptable in Hinduism because there is no single Authority or Organization either to accept you or to reject you or to oppose you on behalf of Hinduism.'

I told her-if you look for meaning in life, don't look for it in religions; don't go from one cult to another or from one guru to the next.

For a real seeker, I told her, the Bible itself gives guidelines when it says that 'Kingdom of God is within you.' I reminded her of Christ's teaching about the love that we have for each other. That is where you can find the meaning of life.

Loving each and every creation of the God is absolute and real. 'Isavasyam idam sarvam' Isam (the God) is present (inhabits) here everywhere-nothing exists separate from the God, because God is present everywhere. Respect every living being and non-living things as God. That's what Hinduism teaches you.

Hinduism is referred to as Santhana Dharma, the eternal faith. It is based on the practice of Dharma, the code of life. The most important aspect of Hinduism is being truthful to oneself. Hinduism has no monopoly on ideas - It is open to all. Hindus believe in one God (not a personal one) expressed in different forms. For them, God is timeless and formless entity.

Ancestors of today's Hindus believe in eternal truths and cosmic laws and these truths are opened to anyone who seeks them. But there is a section of Hindus who are either superstitious or turned fanatic to make this an organized religion like others. The British coined the word 'Hindu' and considered it as religion.

I said: 'Religions have become an MLM (multi-level-marketing) industry that has been trying to expand the market share by conversion. The biggest business in today's world is Spirituality. Hinduism is no exception.'

I am Hindu primarily because it professes Non-violence- 'Ahimsa Paramo Dharma' means-Non-violence is the highest duty. I am a Hindu because it doesn't condition my mind with any faith system.

Hinduism was the first religion originated. Be proud of your religion and be proud of who you are. OM Namah Shivay..............

**Conclusion:**

In the Western world places of religion are associated with public institutions such as Catholic Board of Education, universities, hospitals, such as St. Joseph, St. Peters, and St. Elizabeth, and Long-Term Care facilities, Government and political hierarchies. These institutions showcase one important way in which religious beliefs accomplish things by providing a set of ideas about how and why the world is put together that allows people to accommodate anxieties and deal with misfortune. Furthermore, they accomplish things through interfaith dialogues, round table conferences, religious peace building and interfaith harmony.

Finally, I do not like religious fundamentalism and religious madness. Religion is meant to be therapeutic; the reason for asking what is the nature of the good life is so that you can put it into practice. What I wanted to get at through these dialogues is that sometimes the real skill needed is the intelligence to resist the urge to always try to do everything right. Our own belief that getting work done without interruption is an important goal that is interesting from a philosophical point of view, but not very comforting.

Therefore, as Dr. Aliya Khan (Doctor nominated Muslim Woman of the Year award in Canada) Hamilton interfaith promotor who says we should continue our learning other faiths/religions and educating ourselves during the whole of our lifespan. Further Dr. Ms. Khan says The Holy Quran tells /emphasizes the importance of being kind/ love. Also, Prophet/ Allah emphasized the men and women are equal. She strongly believes that through interfaith dialogue we can make mutual understanding and built contributing society in Canada.

The same idea reflected Mahakavi Subramania Bharthiyar's (The people's Poet) poems as well that the essence of world religions is LOVE further he emphasizes in his poems that universality of REAL LOVE is a unconditional LOVE that is the great spiritual force or essence of world religions. Also, this same idea reflected in Tirumular's Tirumantiram as well. "Ignorant people say that LOVE and GOD are different. They do not know that LOVE and GOD are one when they came to know that LOVE and GOD are one they rest contented in GOD as LOVE" Tirumantiram – 270.

The holy Bible also says that "And a second is like it, you shall LOVE your neighbor as yourself" – Mattew 22:39. Therefore, I strongly believe that as Mahakavi Subramania Bharathiyar's idea that the essence of world religions is LOVE the same idea reflected in Tirukkural as well when you realize yourself through education this truth half of human life religious problems will be solved further Tiruvalluvar ask why can't one learn until die (Trukkural – 397). This is the lesson our readers should learn and that is the purpose of this small article on a brief philosophical dialogue and the role of religion should play in human life. Therefore, this should be our guiding lights and coping with our day to day living principles and beliefs in our life.



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1206



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில் மட்டக்களப்பு

*"திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலாற் கூப்புவர் தம் கை."*

இந்துசமய வழிபாட்டிலே முக்கிய இடத்தைப் பெற்றுள்ள ஆலயங்கள், மக்களின் கலாச்சார பாரம்பரியத்தோடு, மக்களின் உணர்வுகளோடு, எவ்வாறு ஒன்றிணைந்து விளங்குகின்றதென்பதை அண்மைக்காலமாகப் புலம்பெயாந்து வாழும் தமிழ் உறவுகளின் கண்ணீர்கலந்த வேதனையான கருத்துக்கள் வெளிப்படுத்தி வருவதை, அனுபவபூர்வமாக உணர முடிகின்றது தாம் தரிசித்த ஆலயங்களை புலம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றமை கடவுளின் கருணையாகவே காணப்படுகின்றது. தமது வாழ்நாளில் தமது உயிரோடும் உணர்வோடும் கலந்து காணப்பட்ட ஆலயங்களை மீண்டும் தரிசிக்க முடியுமா என்ற புலம்பெயர்ந்த மக்களின் ஆதங்கம் இன்று நிறைவேறிவிட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்ட அழகிய சம்பூர்க்கிராமத்தில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மன் ஆலய வரலாற்றை வாசித்துவிட்டு "இந்தத் தலைமுறையில் நான் உயிர் வாழும் காலத்தில் சம்பூர் பத்திரகாளி கோவிலை மீண்டும் ஒருமுறை சென்று தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்குமென்று நினைக்கவில்லை" என்று சில அன்பர்கள் கண்ணீருடன் அந்த ஆலயத்திற்கும் தமக்குமுள்ள பந்தத்தை வெளிப்படுத்தியபோது மனங் கலங்கியது. எமது ஆலயங்கள் அழிக்கப்பட்டாலும், எதிர்காலச்சந்ததியினராவது எனது குறிப்புக்கள் மூலம் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களை அடையாளங்காணட்டும் என்ற ஆதங்க மிகுதியே தொடர்ந்தும் ஆலய வரலாறுகளை எழுதத் தூண்டுகின்றது.

ஆனால் அதற்கும் மேலாக ஆலய வரலாறுகளின் மூலம் தாம் வாழ்ந்த மண்ணிலே விட்டுவந்த ஆலயங்களையும் அதனோடு எவ்வாறு தாம் ஒன்றிணைந்து வாழ்ந்தோம் என்று பலரும் விபரிக்கும்பொழுது, அந்தத் தமிழ் உறவுகளிடம் நான் கூறிய ஒரே வார்த்தை இதுதான், "கவலைப்படாதீர்கள் நீங்கள் இழந்துவிட்டதாக எண்ணுவது ஒரு மாயை. விரைவில் நீங்கள் இழந்துவிட்டதாக எண்ணும் உங்கள் மண்ணிற்குத் திரும்பவும் செல்லும் வாய்ப்பு விரைவில் மலரும். உங்கள் உணர்வோடும் வாழ்க்கையோடும் உறவாடிய உங்கள் ஆலயங்களையும், நீங்கள் நேசித்த மண்ணையும் தரிசிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை" என்று அவர்களுக்கு அன்போடு அன்றொருநாள் ஆலய வரலாற்றிலே பதிவு செய்திருந்தேன்.

ஆந்தநாள் இன்று அமைந்துவிட்டது. "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்து நண்ணினும் நண்ணுவர்" என்ற பெரியோர் வாக்கை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழரின் தாயகப் பிரதேசமாக விளங்கிச் சிறிது சிறிதாகத் தமிழர்கள் வெளியேற்றப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள, வில்லுப்பிள்ளையார் கோவில் மிகவும் பிரசித்திபெற்ற கோயிலாக விளங்குகின்றது.

ஆற்றங்கரையோரத்திலும், மரங்களின் நிழலிலும் வீற்றிருக்கும் பிள்ளையாரை வினைதீர்க்கும் பிள்ளையார் என்று பக்தர்கள் கூறுவது வழக்கம். சாணி, மஞ்சள், களிமண், கருங்கல், ஐம்பொன் என தத்தமது வசதிக்கேற்ப திருவுருவம் அமைத்து வழிபடும் வழக்கம் இந்து மக்களிடையே காணப்படுகின்றது. விநாயகர் திருவுருவம் இல்லாத ஆலயம் இல்லை. முதல் வழிபாடு மூத்த கணபதிக்கு என்பது இந்து மரபு. இந்துக்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய மரபுகளாயினும், ஆலய மரபுகளாயினும் பிள்ளையாரை வணங்கி வழிபட்ட பின்பே ஏனைய மரபுகள் தொடர்வது வழக்கம். எடுத்த காரியம் வெற்றியுடன் நிறைவேற விக்னங்கள் தீர அருள் புரிபவராக விநாயகர் காணப்படுகின்றார்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நால்வேதங்களைப் பொதுப் பிரமாணமாக ஏற்கும் வைதிக சமயங்கள் ஆறு வகைப்படும். அவற்றுள்ளே கணபதியைப் பரம்பொருளாகக் கொண்டு விளங்கியது காணபதம் என அழைக்கப்பட்டது. இந்துமதத்திலே தளர்வு ஏற்படும் நிலையைப் போக்க, ஆதிசங்கரர் நிறுவனப்படுத்திய சண் மதங்களிலே, கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட காணபதமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒருகாலத்திலே புகழ்பெற்ற தனி மதமாகக் காணப்பட்ட காணபதம், பின்னாளில் நலிவுற்று, தனது தனித்துவத்தை இழந்து சைவசமயத்தோடு இணைந்துவிட்டது.

பிள்ளையார் என்று மக்கள் போற்றி வணங்கும் இவரைப் பல பெயர்களால் அழைக்கும் வழக்கம் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் காணப்படுகின்றது. இப்பெயர்கள் அனைத்துமே பொருட்சிறப்புடையவையாக விளங்குகின்றன. வக்ரதுண்டர், இலம்போதரர், மூசிகவாகனர், விநாயகர், விக்னேசுவார், மூத்தபிள்ளையார், மூத்தநாயனார், கணபதி போன்ற பல பெயர்கள் வழக்கிலுண்டு.

இவற்றுள் கணபதி என்னும் சொல் சமய தத்துவ உண்மைகள் அடங்கிய பொருட் சிறப்புடையது. "க" என்னும் எழுத்து மனோவாக்குக்கள் என்ற பொருளையும், "ண" என்னும் எழுத்து கடந்த நிலையையும், குறிக்கும். தலைவன் என்னும் பொருள் தரும் "பதி" என்னும் சொல்லோடு சேர்ந்து, மனம் வாக்குக்களைக் கடந்த நிலைக்குத் தலைவரான தெய்வம் என்பதைக் கணபதி என்னும் சொல் விளக்குகின்றது.

வளரும்..

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
CR 129, 548, 174, 182, 297, 274, 283, 169, 351, 352, 404, 549, 558, 529, 537, 555, 915, 755, 760, 790, 911, 882, 847, 843, 708, 798, 800, 854, 1055, 2073, 649, 732, 738, 861, 703, 898, 948, 768, 766, 855, 844, 867, 879, 980, 518, 519, 634.

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524







29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1581 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 24, 2026

# "யூலை 1983 இல் பாதிக்கப்பட்டவர்களின் நினைவைப் போற்றுவதும், உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் அனைவரின் பொறுப்பாகும்"

## கருப்பு ஜூலையின் 43வது ஆண்டு நினைவு கூர்தலை முன்னிட்டு கனடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியின் அறிக்கை

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கருப்பு ஜூலை இனவெறி வன்முறையின் 43வது ஆண்டு நினைவை முன்னிட்டு, கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் **(Minister of Public Safety)** ஹரி ஆனந்தசங்கரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், கருப்பு ஜூலை என்பது இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கொடூரமான இனவெறி வன்முறை என்றும், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்து, சொத்துக்களை இழந்து, தாயகத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், கருப்பு ஜூலை தமிழர் சமூகத்தின் வரலாற்றில் அழியாத வடுவாக இருந்தாலும், நீதியும், பொறுப்புக்கூறலும், நல்லிணக்கமும் நிலைநாட்டப்பட வேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார். அத்துடன், பாதிக்கப்பட்டவர்களின் நினைவைப் போற்றுவதும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் எதிர்காலத்தை உருவாக்குவதும் அனைவரின் பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார்.

கருப்பு ஜூலை மறக்கப்படக்கூடாத வரலாறு அது மீண்டும் ஒருபோதும் நிகழக்கூடாது என்ற செய்தியுடன் தனது நினைவு அறிக்கையை கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ளார்





# ஒன்ராறியோ அரசும் கறுப்பு ஜூலையின் 43ஆம் ஆண்டை நினைவுகூர்கிறது என்கிறார் இணைஅமைச்சர் விஜய் தணிகாசலம்

"ஒன்ராறியோவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் கறுப்பு ஜூலையின் 43ஆம் ஆண்டு நினைவை இன்று கனத்த இதயத்துடன் நினைவுகூர்கின்றனர்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம், இலங்கை அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியான வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களின்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும், இடம்பெயர்ந்தும் பாதிக்கப்பட்டனர். அத்துடன் தமிழர்களின் வீடுகள், வணிகங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டன".

இந்தத் துயரத்தின் வடுவையும், அதை எதிர்கொள்ள நிறைவேற்றப்பட்ட சட்டத்தையும் நினைவுகூர்ந்து அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்:

குடும்பங்கள் பிரிக்கப்பட்டு, முழுச் சமூகங்களும் பேரழிவிற்குள்ளாகியதால், எண்ணற்ற தமிழர்கள் பாதுகாப்புத் தேடித் தமது தாயகத்தைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகினர்.

கறுப்பு ஜூலையின் கொடூரங்களில் இருந்து தப்பிப்பிழைத்த பலர் பின்னர் கனடாவில் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பினர். இன்று அவர்கள் எமது அயலவர்களாகவும், சமூகத் தலைவர்களாகவும், வணிக உரிமையாளர்களாகவும், பெற்றோர்களாகவும் விளங்குகின்றனர்.

"கொடூரமான இவ்வினப்படுகொலையால், தமிழர்கள் அளப்பரிய துன்பங்களைச் சுமந்து தமது தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்தனர். தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்கொடுமைகளை உலகிற்கு எடுத்துரைக்கவும், அவர்களின் பாதிப்புகள் என்றும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யவும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 104 நிறைவேற்றப்பட்டது."

43 ஆண்டுகள் கடந்த பின்னரும், சமூகத்தினரும் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து நினைவஞ்சலி செலுத்தி வருகின்றனர். கல்வியூட்டல், குரல்கொடுத்தல் மற்றும் நினைவுகூருதல் ஆகியவற்றின் மூலம் ஒன்ராறியோ மாநிலம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு உயிரையும் கௌரவிப்பதுடன், தப்பிப்பிழைத்தவர்களின் துயரங்கள் என்றும் மறைக்கப்படாது என்பதை உறுதிசெய்கிறது. என்றும் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தின் இவ்வருடத்தின் "தியாகராஜ ஆராதனை" இசை உற்சவம் சிறப்பாக நடைபெற்றது





கனடாவில் வெற்றிகரமாக இயங்கி கர்நாடக இசைத்துறைக்கு ஊக்கமளித்து வரும் "ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தின்" இவ்வருடத்தின் "தியாகராஜ ஆராதனை" இசை உற்சவம் கடந்த 18ம் திகதி சனிக்கிழமையன்று மன்றத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்ற இந்த "தியாகராஜ ஆராதனை" இசை உற்சவத்தில் பல இசையாசிரியைகளின் மாணவ மாணவிகள் தங்கள் திறன்களை மேடையில் சமர்ப்பணம் செய்தார்கள். அன்றைய தினம் ஒன்றாரியோ இசைக் கலாமன்றத்தின் தலைவர் தம்பையா ஸ்ரீபதி உட்பட அனைத்து இயக்குனர் சபை உறுப்பினர்களும் அங்கு சமூகமளித்து அனைத்து இசை பயிலும் மாணவ மாணவிகளை உற்சாகப்படுத்தினார்கள்.

# வல்வெட்டித்துறையில் விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் இருவரான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருக்கு சிலைகள் நிறுவ முயன்றவர் கைதாகி பின்னர் விடுதலை

வெலிக்கடை சிறைக்கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முன்னாள் தலைவர் தங்கத்துரை மற்றும் முன்னாள் செயலதிபர் குட்டிமணி ஆகியோரின் உருவச்சிலை திறப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்த கந்தசாமி சதீஸ், என்னும் ஆர்வலர் ஒருவர் கடந்த 20ம் திகதி திங்கட்கிழமை வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சிறை திறப்பு விழாவும் நீதி மன்ற தடை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது (தொடர்ச்சி 18ம் பக்கம்)


தங்கத்துரை


குட்டிமணி